ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

ஜனவரி - பிப்ரவரி 2023

ஆண்டு 3 ▲ இதழ் 04

விலை : 200 / -



## இராம வேல்முருகன் வலங்கைமான்


புள்ளியில்லாக் கோலம்



# முத்தமிழ் கலசம்



இருமாதத்திற்கொருமுறை
**ஜனவரி - பிப்ரவரி 2023**
ஆண்டு 3 ▲ இதழ் 04

**ஆசிரியர் : சித்தி வஃபீரா**
editor & publisher : Sithy Wafeera

**கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமீன்**
Hon. editor : Tamilnenjam Amine

படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email :
muththamizh.kalasam@gmail.com

The editor of “Muththamizh kalasam”,
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

Printed by
Mutur JMI Publication
contact : 077 1020030

எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

அன்பான வாசக நெஞ்சங்களே வணக்கம்!

புதியதோர் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். இந்த புத்தாண்டிலாவது தீயவை தகர்த்து,

பகைமைகள் களைந்து, நல்லெண்ணங்களை வளர்த்து நம்பிக்கையுடன் முன்னேறலாமே! புதிய முயற்சிகளும் புதிய இலக்கு களும் எம்மை வெற்றிப் பாதையில் வழிநடத்திச் செல்லட்டும். முயற்சி களும் பயிற்சிகளுமே எமது மூலதனமாக, முன்னோக்கி மிக அழுத்தமாக அடிவைப்போம். சோதனைகளைக் கண்டு சோர்வடையாமல் தன்னம்பிக்கை யுடன் வெற்றிகளைக் கைக்கொள் வோம். நேர்மறையாக சிந்தித்து சிறப்பாக வாழ்வோம்.

மலர்ந்திருக்கும் இப்புத்தாண்டு அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சியை யும் சுபீட்சத்தையும் நல்கட்டும்! இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

முன்கூட்டிய பொங்கல் நல்வாழ்த்துகளும் உரித்தாகட்டும்!

– சித்தி வஃபீரா
ஆசிரியர்



# நூல் அறிமுகம்

கவிதாயினி வஃபீரா வஃபி எழுதிய 'புள்ளியில்லாக் கோலம்' எனும் ஹைக்கூ நூல், கடந்த 23.12.2022 அன்று மாலை ஏறாவூரில் எளிமையான முறையில் வெளியிடப் பட்டது. 128 பக்கங்களில், 365 ஹைக்கூக்களை உள்ளடக்கிய இந்நூலின் கணணிப் பதிப்பும் வடிவமைப்பும் பிரான்சில் இருக்கும் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் கைவண்ணத்தில் உருவானதாகும். இதற்கான அணிந்துரையை முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம் (சென்னை) வழங்கியிருந்தார்.

நூல் தேவைகளுக்கு Muththamizh.kalasam@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

## பட்டாம் பூச்சியின் மரணம்!...

கழுத்தை நெரிக்கும் கனவொன்றின்
அந்தரங்க மொழியில்
ஆதிப்பாறையில் என்
காலங்களை
விரித்து வைத்துப் படிக்கிறேன்

ஆழத்தின் பிளவுகளிலிருந்து
வாளொன்று
உருக்கொண்டு
இருண்மையை கிழிக்க
விசிறியடிக்கப்படும் ஒளிக்கற்றைகளில்
கண்கள் குருடாகின்றன
இயற்கையின் வசீகரங்களால்
பிடுங்கி எறியப்பட்ட விழிகள்
பாதையை தத்தெடுக்க
பயணம் தொலைகிறது
ஊழ் வினையின் காலத்துள்

அவனது அவர்களதாக
அவர்களது உனதாக
உன்னுடையது
என்னுடையதாக
என்னுடையதை எனது சந்ததியினராக்கும்
யுகங்களின் கண்ணீரை
தேக்கி வைத்திருக்கும்
பூமியின் ஈரம்
காய்ந்து விடக்கூடிய
அபாய நொடியொன்றில்
சிறகடிக்கிறது ஒரு
பட்டாம் பூச்சி

ஒப்பனையற்ற நாடகம்
அரங்கேறும் சாத்தியங்களை
இழந்து போய்க்கொண்டிருக்கும் கனவு
பட்டாம் பூச்சியின்
வர்ணங்களை பூசிக்கொள்கிறது

இப்போது
நிறமற்றுப்போன பட்டாம் பூச்சி
வர்ணங்கள் கரைந்த வெளியெங்கும்
கானகப் பாடல்களை இசைத்தபடி
நிர்வாணமாய் அலைகிறது

கனவழிந்து விழிக்கையில்
இயல்பறாத பட்டாம் பூச்சி
மரித்துக் கிடந்தது

மனமெனும் வியாபத்துள் ...

- **எ.ஜோய், பிரான்ஸ்**




# இராம வேல்முருகன் வலங்கைமான்

இந்த மாத முத்தமிழ் கலச இதழில் அறிமுகமாகும் கவிஞர் இந்தியாவைச் சேர்ந்தவர்; தமிழ்நாட்டில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள வலங்கைமான் என்ற ஊரில் பிறந்தவர். திருவாரூர் மாவட்டம் தமிழ்ச்சான்றோர்களுக்குப் பெயர் பெற்ற ஊர். ஆரூர் திருக்கோயிலில் அருள்பாலிக்கும் தியாகராசர் சுந்தருக்காக வீதிகளில் நடந்த பெருமை திருவாரூருக்கு உண்டு. தமிழ்த்தென்றல் திரு.வி.கல்யாணசுந்தரனார் வாழ்ந்த ஊர். திருவாரூருக்கு அருகில் உள்ள திருக்குவளைதான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊர் . திருவாரூர் மாவட்டம் நன்னிலம் அருகில்தான் கவிஞர் பிறைசூடன் திரைப்பட இயக்குநர் கே.பாலச்சந்தர் ஆகியோர் பிறந்துள்ளனர். இன்றும் தமிழ் இலக்கிய உலகம் போற்றும் ஆரூர் தமிழ்நாடன் பட்டி மன்ற நகைச்சுவைப் பேச்சாளர் சண்முக வடிவேல் ஆகியோரோடு திருவாரூர் மாவட்டத்திற்குப் பெருமை சேர்ப்பவர் இந்தக் கவிஞர். தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் பிறந்த ஊரான உத்தமதானபுரம் வலங்கைமானுக்கு அருகில் தான் உள்ளது. ஆங்கிலேயர் பாராட்டிய வெள்ளிநாக்கு வீரர் சீனிவாச சாஸ்திரி அகிலஉலகத்தவிலிசைச் சக்கரவர்த்தி வி.எஸ்.சண்முகசுந்தரம் ஆகியோர் பிறந்த ஊரில் பிறந்தவர்தான் இந்தக் கவிஞர். 2020 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் தமிழ்ச் செம்மல் மற்றும் தூயதமிழ்ப் பற்றாளர் விருதுகளைப் பெற்ற பாவலர் மணி இராம வேல்முருகன் அவர்களே இம் மாத அறிமுகப் கவிஞர் ஆவார்.

## பிறப்பும் இளமைக்காலமும்

1970 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ஆம் நாள் ( திருவள்ளுவராண்டு மாசித்திங்கள் 6 ஆம் நாள் ) வலங்கைமானில் இரெ.இராமலிங்கம் மற்றும் இரா.சாந்தி இணையருக்கு மூத்த மகனாகப் பிறந்தவர். தனது பள்ளிக்கல்வியை விருட்பாட்சிபுரம் த.சு.லு.தி.ஆரம்பப் பள்ளியிலும் வலங்கைமான் அரசினர் மேநிலைப்பள்ளியிலும் நிறைவு செய்தார். பள்ளிக்காலங்களில் சிறந்த மாணவராக வகுப்பு முதன்மை பெற்ற மாணவராகத் திகழ்ந்தவர். பத்தாம் வகுப்பில் பள்ளியில் மூன்றாம் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். பள்ளி இலக்கிய மன்றச் செயலாளராகப் பணியாற்றியவர். தனது 12ஆம் வயதிலேயே மேடையில் ஏறிப் பாடவும் கவிதை வாசிக்கவும் பேசவும் செய்தவர். பல பரிசகளைப் பெற்றுத் தனது பள்ளிக் காலத்தில் தனது சகமாணவர்களிடையே பிரபலமானவராகத் திகழ்ந்தவர். தமிழாசிரியர் புலவர் வ.கலியமூர்த்தி தலைமையாசிரியர் திருமதி பா.உமாராணி தாவரவியல் ஆசிரியர் அரங்கநாதன் விலங்கியல் ஆசிரியர் இராஜ்முகம்மது ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.

தனது விலங்கியல் ஆசிரியர் மேல்கொண்ட அன்பின் காரணமாக விலங்கியல் படிப்பைத் தேர்வு செய்து அதில் இளமறிவியல் மற்றும் முதுஅறிவியல் பட்டங்களை தென்னிந்தியாவின் கேம்பிரிட்ஜ் எனப்படும் கும்பகோணம் அரசினர் ஆடவர் கலைக்கல்லூரியில் 1986-91ல் பெற்றார். அங்கும் முதல்மாணவராகவே தேர்ச்சி பெற்றார். பின்னர் 1991-92ல் ஆசியாவின் மிகப்பழமையான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியான சென்னை சைதாப்பேட்டை கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில் தனது கல்வியியல் பட்டத்தைப் பெற்றார். கல்லூரியின் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றதற்காக அப்போதைய கல்வி அமைச்சர் திருக்கரங்களால் இரண்டு முதல்பரிசுகளைப் பெற்றார்.

## பணியும் திருமண வாழ்வும்

1992ல் குடந்தை லார்டு கிருஷ்ணா பதின்மப் பள்ளியில் ஆசிரியராக வும் பள்ளி முதல்வராக வும் பணியாற்றியவர் அரசுப்பணி கிட்டியதால் வேலூர் தந்தை பெரியார் அரசு வகைத்தொழில்நுட்பக்கல்லூரியில் 1994ல் பணியில் சேர்ந்து அதன் பின்னர் சென்னை, சீர்காழி, திருத்துறைப்பூண்டி மற்றும் கந்தர்வக்கோட்டை ஆகிய ஊர்களில் பணியாற்றிவிட்டு தற்போது வலங்கைமான் அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் முதல்வரின் நேர்முக உதவியாளராகப் (நிர்வாக அலுவலராகப்) பணியாற்றி வருகிறார்

இதற்கிடையில் 03.09.2000 அன்று திருவிடைமருதூரில் இவருக்கும் தரங்கம்பாடி வட்டம் செம்பொன்னார்கோயில் அருகிலுள்ள காளகஸ்தினாதபுரம்

ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு ந.ஜெயராமன் – தமிழ்ச் செல்வி இணையரின் இரண்டாவது மகளான சாந்தி என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். வேதிகா என்ற மகளும் வடிவ கான் என்ற மகனும் இவர்களுக்குப் பிறக்க, தனது குடும்ப வாழ்வை மகிழ்வுடன் நடத்தி வருகிறார். மகள் பொறியியலும் மகன் மருந்தியலும் படித்து வருகின்றனர்.

## கவிதையும் தமிழ்த்தொண்டும்

கவிதை இளமைக்காலந்தொட்டே இவருடன் தொடர்ந்து வந்தாலும் சென்னையில் படித்த போதுதான் அத்திறன் இவரிடம் முழுமையாக வெளிப்பட்டது. கல்லூரிப் படிப்பை நிறைவு செய்த பிறகு 1992ல் இவரது தென்னாப்பிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா குறித்த  கவிதை மாலைமுரசில் வெளியானதும் இவரது நம்பிக்கை அதிகமாக இராணி வாரஇதழ் , தினமலர் நாளிதழ், தினத்தந்தி, ஓம் சக்தி மாதஇதழ் , கவிதை மாத இதழ், குண்டூசி மாத இதழ், பாக்யா வாரஇதழ், தும்பை இதழ் போன்ற பிரபலமான இதழ்களில் இவரது கவிதைகள் 2000 வரை தொடர்ந்து பிரசுரமாகின .
1996 ல் திருச்சி அகில இந்திய வானொலிநிலையக் கவியரங்கில் கவியரங்கத்தலைவராகப் பங்கேற்ற இவர் வசந்த் தொலைக்காட்சி மக்கள் அரங்கிலும் பங்கேற்றுள்ளார்.

பணிப்பளுவின் காரணமாக சுமார் 16 வருடங்கள் வனவாசம் இருந்த இவர் 2016க்குப் பிறகு முகநூலில் வந்த பிறகு தனது இரண்டாவது அத்தியாயத்தைத் தொடங்கினார். பல முகநூல் குழுமங்களில் தனது கவிதைகளை எழுதி எண்ணற்ற சான்றுகளையும் விருதுகளையும் பெற்ற இவர் வாரந்தோறும் தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் கவியரங்கங்களில் பங்கேற்று வருபவர் கவியரங்கம் மட்டுமல்லாது பட்டிமன்றம் , தனியுரை, சமயச் சொற்பொழிவு , தன்னம்பிக்கையுரை ஆகியவற்றிற்காக, சென்னை முதல் குமரிவரைப் பயணிப்பவர். எழுக தமிழா, மரபுப்பாமாலை, தொலைந்துபோன கவிதை, போன்ற கவிதைநூல்கள் கவிதைக்கழகு இலக்கணம் போன்ற இலக்கணக்



கட்டுரை நூல், எதுகவிதை, வானமே எல்லை தமிழ்ப்பூங்கொத்து போன்ற தொகுப்பு நூல்கள் தன்முனைக் கவிதை அந்தாதி போன்ற தன்முனைக் கவிதை நூல் உள்ளிட்ட பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

பாரதி, புரட்சிக்கவிமுரசு, திருவள்ளுவர், ஔவை உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றவர் 2020 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டரசின் தமிழ்ச் செம்மல் விருதை 2021 பிப்ரவரி முதல்நாள் தமிழகமுதல்வர் திருக்கரங்களால் வழங்கப் பெற்றார் ; மற்றும் அதே ஆண்டுக்கான தூயதமிழ்ப்பற்றாளர் விருதை 08.09.2021 ல் தமிழக அரசின் உயர்அதிகாரிகளால் சென்னையில் பெற்றார்

தற்போது தஞ்சைத்தமிழ் மன்றத்தின் நிறுவனர் செயலராகப் பணியாற்றித் தமிழ்த் தொண்டு ஆற்றி வருபவர். திங்கள் தோறும் கவியரங்கம் நடத்தி இளைஞர்களையும்

விழாவில் லேணா தமிழ்வாணன் அவர்கள் பொன்னாடை அணிவித்து மகிழ்ந்தபோது...



மாணவர்களையும் ஊக்கப்படுத்தி வருகிறார். நிலாமுற்றம் என்ற முகநூல் அமைப்பின் செயலாளராகப் பணியாற்றுவதோடு கடந்த ஆறு வருடங்களாக மரபுக் கவிதை எழுதுவதற்கான பயிற்சியை நடத்தி வருகிறார். நூற்றுக்கணக்கான மரபுக்கவிஞர்களை உருவாக்கி வருகிறார். தமிழன்னைத் தமிழ்ச் சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலாளராகப் பணியாற்றி வருகிறார். தமிழ்நாடு புலவர் பேரவையின் துணைச்செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தமிழ்நெஞ்சம் திங்களிதழின் ஆசிரியர்குழுவில் இணைந்து தனது இதழியல் தொடர்பான பணிகளையும் செய்து வருகிறார்.

இவ்வாறு கவிதை எழுதுதல் பட்டிமன்றத் தலைவர், தன்னம்பிக்கைப் பேச்சாளர் கவியரங்கத்தலைவர் போன்ற பணிகளையாற்றும் இராம வேல்முருகன் நன்றாக ஓவியம் வரையக்கூடியவர். துணி கண்ணாடி போன்றவற்றில் ஓவியம் வரைந்துள்ளார். திரைப்படத்தில் நடித்ததோடு இல்லாமல் ஒரு பாடலும் எழுதியுள்ள இவர் ஒரு பன்முக க் கலைஞர் என்பதில் ஐயமில்லை. மேலும் பல விருதுகளைப் பெற்று தமிழுலகில் மேம்பட்டு விளங்க வாழ்த்துவதுடன், முத்தமிழ்க் கலசம் சார்பாகவும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

- தமிழமின்

# பெண்மையைப் போற்றிடு

பெண்மையைப் போற்றிடு பேறுகள் பெற்றிடு
கண்ணிலும் மேலாய்க் காவல் காத்திடு

மென்மையைப் பாடிடு மேதினியில் உய்த்திடு
கன்னி அவளின் கைங்கர்யம் அறிந்திடு

பொறுமை அணிந்த பூமியின் தேவியாம்
சிறுமை காணாது சிறப்புகள் தந்திடு

இல்லம் காப்பவள் இனிமையாய் இருப்பவள்
சொல்லின் வழியே சோகம் துடைப்பவள்

கருணையின் புத்திரி கனிந்த நல்லுள்ளத்தாள்
பெருமையுடன் வாழ்வில் பிரியமாய்ப் பேணிடு

## DR ஜலீலா முஸம்மில்

ஏறாவூர், இலங்கை

# யாதும் ஊரே யாவரும் கேளீர்

உலகில் உயிர்கள் சிறப்பது உயிராலே
நித்தம் உண்மையை உணர்வோம் அறிவாலே
மண்ணில் மனிதனின் வாழ்க்கை ஒருமுறையே
புரிந்து அழகாய் வாழ்வோம் நல்முறையே
மனிதன் பிறப்பது நிச்சயம் வாழ்ந்திடவே
வாழ்க்கை ஒழுக்கம் நிறைந்தால் சிறந்திடுமே

உரிமைகள் உறவில் நிலைத்துக் கொண்டால்
நட்பினில் உண்மையை விதைத்துக் கொண்டால்
மனிதம் காக்கத் துணிந்து நின்றால்
உதவும் கரங்களை செயலில் கொண்டால்
வானமும் உனக்கு வாழ்த்துகள் பாடும்
வானவில் வந்து மாலைகள் சூடும்

**வாழ்வியல் கவி சா. நாகூர் பிச்சை**
திண்டுக்கல்

# "சமாதானம்"

நீ
முத்தமிட்டால்
நான் சமாதானம்
அடைந்து
விடுவேன் தான்.
உன் மேலான
கோபங்களும்
நீர்த்துவிடும்.
ஆனால்
அதற்காக
நீ முத்தம் எல்லாம்
தர வேண்டிய
அவசியம் இல்லை..
முத்தம் தருகிறேன்
என்று சொல் போதும்
சிறு குழந்தை போல
தலையாட்டி
சமாதானம்
ஆகி விடுவேன்
நான்...

# "மாற்றங்கள்"

அம்மி போய்
மிக்ஸி வந்தது!
ஆட்டுக்கல் போய்
கிரைண்டர் வந்தது!
விறகு அடுப்பு போய்
கேஸ் ஸ்டவ் வந்தது!
கொல்லைப்புறம் போய்
பால்கனி வந்தது!
சைக்கிள் போய்
ஸ்கூட்டி வந்தது!
மாமியார் போய்
மருமகள் வந்தாள்...!

மகிழை. சிவகார்த்தி
புறத்தாக்குடி



# அன்பின் பேரா

பச்சைத் தளிர் புல்வெளிகள்
மேகங்களையும் பசேலெனவே
மயக்கிக் காட்டிடும்
சுற்றியுள்ள பல மாடிக் கட்டங்களும்
காண்பதற்கு அழகாய்
கண்களைக் குளிரச் செய்யும்

வசந்த கால வேளை தனில்

உனைச் சுற்றிப் பார்ப்பதற்கென்றே
ஒரு கூட்டம்
வாகன நெரிசலிலும் அலைமோதும்

புகைப்படங்களும் போட்டி போடும்
உன் அழகை முதலில் பதிவதற்கு
எண்ணிலடங்கா வித்தைகள்
உன் உடம்பினுள் காணப்படும் சொத்துக்கள்

உன் மண்ணை தரிசிப்பதற்கான
காத்திருப்போ ஐந்து வருடங்கள்
பெயர் அறியா கிராமங்களும்
கேட்டே இராத ஊர்களும்
அறிமுகமற்ற முகங்களும்
அவ்வளவு நெருக்கமான உறவுகளாக
உன்னுடனான ஒற்றைப் பயணத்தில்

நெடுந்தூரப் பேருந்துப் பயணங்களும்
நண்பிகளுடனான

ரயில்வேப் பயணங்களும்
இடையிடையே செல்லும் சுற்றுலாக்களும்
இன்றும் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன
அழியாத நினைவுகளாக

இல்லத்தை நினைவுபடுத்தும் விடுதி வாழ்வும்
வயிறு மட்டும் நிறையாத சிற்றுண்டி உணவும்
அடிக்கடி கண்களில் படும் ஹோட்டல் சாப்பாடும்

நண்பிகளின் வருகையில் வீட்டு சாப்பாடும்
இன்றும் நாவை நனைக்கவே செய்கின்றன

தாய்மையாய்க் காக்கும் தோழர்களும்
எல்லாமுமாய்க் கிடைத்த தோழிகளும்
சிங்கள, இந்து நட்புக்களின் நேசமும்
எல்லையற்றே கிடைத்தன உன்னில்

# வளாகமே

ஆண்டுகள் மூன்று
அட்டகாசமாய்க் கழிந்தாலும்
செமஸ்டர் வந்தால்
அசைன்மென்ட் எழுதியே கை வலிக்கும்
பரீட்சை இரவுகள் மட்டும் - அங்கு
நடமாடும் சேவை ஆயிரமாயிரம் நடக்கும்

ஒரு தட்டில் பல கைகளும்
ஒரு கட்டில் சில மெய்களும் தாங்கி
ஒரு அறையே விழாக்கோலம் பூணும்
பிறந்த நாள் களிப்புக்களும்

நள்ளிரவில் வெட்டப்படும் கேக்குகளும்
துரத்திப் பிடித்து நடாத்தப்படும் பக்கெட்டிங்களும்
அறை அறையாய் அரட்டை அடிக்க
புது உடையுடன் பவுடர் பூசி செல்லும் தருணங்களும்
இப்பொழுதும் கண்முன்னே

கேட்காமல் விட்ட விரிவுரைகளும்
மாட்டிடாமல் வைக்கும் கள்ள சைன்களும்
லீவிற்காய் வாங்கிய மெடிக்கல்களும்
காசுக்காய் ஏங்கிய மஹாபொலைகளும்
தெவிட்டாத தித்திப்புக்களே


எப்பொழுது முடியும் என

ஏங்கிய நாட்கள்
ஏனடா முடிந்தது என நோக வைத்து
கண்ணீருடன் விடை கொடுத்தது
பிரியா விடை வைபவமாக

அன்பின் பேரா வளாகமே
உன் இன்பத்தை அள்ளிப் பருகி
தாகம் தீர்க்கும் ஆயிரம் மாணாக்கரில்
புன்னகைப் பூக்களாக அவதரித்த நாம்
என்றும் அழியாச்

சுவடுகளே
இனியும் கிடைத்திடாத
அந்த அழகிய தருணங்களை
வாழ்வில் ஒரு முறையாவது
அனுபவிக்கக் கிடைத்தது
வரமே அன்றி வேறில்லை

**சதீகா ரஸ்லி**
புத்தளம், ரசூல் நகர்



# நீ ஒரு சாதனையாளனா?

தடம் பதிக்காமல்
தடம் புரள்வதேன் ?
ஏதோ ஒன்றைமட்டும் அடிக்கடி
யோசித்துக்கொண்டே இருக்க
மனதில் ஒரு இடம் ஒதுக்கப்படுகிறது !
அது நிறைவேறா எண்ணங்களும்
ஆசா பாசங்களும் ...
எப்படி வேட்கையாகிப்போனது ?
கொஞ்சமாவது அருந்த
பசி எடுக்க வேண்டாமா ?
நிகழ்வுகள் ஆயிரமாயிரமாய்
அன்றாடம் கண்ணெதிரே...
அனைத்தையும் உள்வாங்கி
செப்பனிடச் சிந்தனைக்கூடத்தில்
இடமில்லையே !
குறிக்கோள் என்னவென்று
புரிந்துகொள்ளாமல்....
யாத்திரையின் தலம் அறியாமல்....
இப்போதெல்லாம்
பயணிக்கப்படுகிறோம் ...!
நீ ஒரு சாதனையாளனா ?
விமர்சனங்களுக்கு
உள்ளாக வேண்டிவரும்....
தடைக்கற்களை படிக்கல்லாக்கி
முன்னேற முனைப்புள்ளவனாயிரு!
திட்டமிடலும் செயலாக்கமும்
உள்ளங்கையில் வைத்திரு...
கண் முன் தெரியும்
ஒரு ஒற்றைப் புள்ளியில் உனது
நகர்தலின் இலக்கு தெளிவாகும் !
இனி தடம் புரளும் இடையூறு...
உனது தடம்பதிக்கும் வரலாறு !

**கா. ந. கல்யாணசுந்தரம்**



Happy New Year &
பொங்கல் வாழ்த்துகள்
- முத்தமிழ் கலசம்



# கவிதை

நேற்றே திருடிவைத்திருக்கலாம்
கொஞ்சம் விண்மீன்களும்
ஒரு நிலாவும்
மின்மினி பூச்சுகளும்....

கருமேகமூட்டங்கள்
சூழ்ந்து கிடக்கிறது
இன்றைய வானம்
மிச்சமிருக்கும் இந்த இரவை
நான் என்னதான் செய்வது?

--------

கொஞ்சம் சாதம்
நிறைய கொஞ்சல்கள்
அங்குமிங்கும் சிறுநடை
கரிய வானம்
ஒற்றைவிரலில் காட்டியபப்படியே
ஊட்டத்தொடங்குகிறாள் அம்மா.
பசியாறி உறங்கப்போகிறது நிலா.

**தினுஷா மகாலிங்கம்.**

நாவலபிட்டி.

# தாய்க்கொரு கவிதைசொல்

தாய்மை அதைவிட
சிறந்த கவியேது?

துயரங்கள் தான் அடைந்து
துணிச்சலாய் தெரிவாள்
தன் குழந்தைக்கும்

உன்னதமான உறவு
உயர்வான உறவு
அற்புதமான உறவு
அன்பான உறவு

அமுதமும் தந்து
அழகையும் தந்து
அறிவையும் தந்து
அவளது உயிரையும் தந்து
அர்ப்பணித்த தியாகியவள்

குரோதம் விரோதம் அற்ற
உண்மை நேசத்தின் அடையாளம்
அவள் இல்லையெனில்
நீயுமில்லை நானுமில்லை
இவ்வையகத்தில் வாழ்ந்திட

வளர்த்தாள் உனை வான்மதி போல்
தாரகையிலும் தடம் பதித்திட
செய்தாள் மேகங்களை
அள்ளியெடுத்து
தடவி விட்டாள் உன் மேனியெங்கும்
மென்மையாகிட மெதுவாகவே

அவள் ஆசைகள் தீராதவை
தெரிந்தும் திகட்டாது சுவைப்பாள்
தன்னிலும் மேலாக தாயிருப்பாள்
தங்கத்தட்டில் செய்த சாசனமாய்
உனை இரசிப்பாள்

**ஹனீ**
கிண்ணியா

# அழைப்பு

**காணும் பொங்கலாய்
காதலா காதலா
உன்னைக் காணவே
கண்கள் ஏங்குகிறதடா**

**காதலர் தினம்
மாதா மாதம் இல்லையில்லை
தினந்தோறும்
வந்திடக் கூடாதோ**

**கிடைக்கும் பரிசுக்காக இல்லை
கிடைக்கும் அணைப்புக்காக
காதல் துடிப்பினை அடக்கிடவே
காதல் படுத்தும் பாடடா**

**பார்க்கும் இடமெல்லாம் நீயே
எங்கும் நீ எதிலும் நீ
என் கண்ணிலும் நீ கருத்திலும் நீ
நினைவுகள் துடிக்கும் துடிப்படா**

**ஏட்டிலும் நீ எழுத்திலும் நீ
பாட்டிலும் நீ பரதத்திலும் நீ
காட்டிலும் நீ கடலிலும் நீ
வானிலும் நீ வயலிலும் நீ**

**பித்துப் பிடித்த மனநிலை
கத்தும் குயிலாய் தனிமையில் நான்
விடிவெள்ளியாய் காதலர் தினம்
விடியட்டும் காதலா விரைந்திடடா**

**நாமிருவர் இல்லையடா
நாம் ஒருவர் தானடா
இன்பமும் துன்பமும்
அதிலே அடங்குமடா**

**காதலின் நினைவுகளே
கன்னலாய் இனிக்கிறதடா
தென்றலாய் தாலாட்ட
மின்னலாய் விரைந்திடடா**

**நீயே எனக்குப் பரிசு தானடா
வேறொன்றும் வேண்டாமே
அருகாமை தான் வேண்டும்
அணைப்பில் இருப்பேனடா**

**கவிஞர் புல்லாங்குழலன்**

# விடியல் காண்பாய் எம் தேசமே!

கல்வி அழியுது; பல கலைகளும் அழியுது!
நாடோ முடங்குது; சிலர் பாடோ அடங்குது!
இந்து சமுத்திரத்தின் முத்து பரிதவிக்குது!
இதர நாட்டின் சொத்தாய் வலி அனுபவிக்குது!

விலைவாசி விண் வரை தாவிக் குதிக்குது!
விடியல் தேடி மனம் ஏங்கித் தவிக்குது!
ஆட்சி பீடமேறிய அகங்கார பேய்கள் நாட்டை
ஆட்டிப்படைக்குது!சுயநலப் பிசாசுகளோ
பொருள் பதுக்கி அதில் குளிர் காயுது!

அரசியலோ மர்மமாய் மயங்கிக் கிடக்குது!
ஊழல்களோ அதில் தலை விரித்தாடுது!
வரிசைகளோ மனித வாழ்வை பந்தாடுது!
சில உயிர்களோ அதில் தினம் பலியாகுது!

எரிவாயுவின்றி அடுப்போ தூங்கிக் கிடக்குது!
எரிபொருள் தேடி காலோ கட்டையாகுது!
உணவு இன்றி பல குடும்பம் வாடுது!
ஏழை உயிர்கள் பல தினமும் மாயுது!

மின்சாரமோ தினம் மெழுகாகுது
பால்மாவின்றி குழந்தை பதறி அழுகுது!
அத்தியாவசியம் இன்று அநாவசியம் ஆகுது!
அடிப்படைத் தேவை இன்று கடப்படி தாண்டுது!

பூட்டிய பூட்டாய் பாடசாலை மூடிக் கிடக்குது!
கல்வியின்றி மாணவர் சமூகம் நாசமாகுது!
பல்கலைக்கழக கல்வியும் இன்று பாழாகுது!
பட்டம் பெறுவதும் பெரும் கேள்விக் குறியாகுது!

ஈழத்தாயோ தினம் இருளில் மூழ்குது!
ஈவு இன்றி சர்வதேசம் கை நழுவுது!
கடன் சுமையால் கப்பல் பாதியில் நிற்குது!
டொலர்கள் இன்றி வட்டி வானைப் பிளக்குது!

தொழிலுமின்றி ஆண்வர்க்கம் அவதியுறுகுது!
வெளிநாடு தேடி அவர்கள் மனமோ விரையுது!
வருவாய் இன்றி கொலை, கொள்ளை
அதிகரிக்குது!

கொடுமையாய் மனிதம் மரணித்து போகுது!
மனித மனங்களோ மலடாய்க் கிடக்குது!
மனித நேயமின்றி மிக வரண்டு போகுது!
வலித்து வலித்து வாழ்க்கை சலிக்குது!

மாற்றம் தேடி மனமோ துடிக்குது!
என்றோ இந்நிலை மாறும் என மனம் ஏங்குது!
எம் ஈழத்தாய் நிலை எண்ணி கண்ணோ தினம் கலங்குது!
விடியல் காண்பாய் எம் தேசமே! காத்திருக்கின்றோம் உனக்காகவே!

**- பாத்திமா ஹகீமா அமீனுதீன்** செம்மண்ணோடை

# படித்ததில் பிடித்தது

50 வயதைக் கடந்து 60 நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒருவரிடம் 'உங்களிடம் என்ன மாற்றங்களை உணர்கிறீர்கள்? என்று கேட்கிறார் ஒருவர்......*

*அவர் சொன்ன பதில்*

1. என் பெற்றோரை, என் உடன் பிறந்தவர்களை, என் மனைவியை, என் குழந்தைகளை, என் தோழர்களை நேசித்த பிறகு, இப்போது என்னை நேசிக்கத் துவங்கி உள்ளேன்.

2. நான் 'உலக வரைபடம்' அல்ல என்று உணர்ந்து கொண்டுள்ளேன். இந்த உலகத்தை என் தோள்களில் சுமப்பதில்லை.

3. காய்கறி விற்கும் தங்கச்சியிடம், பழம் விற்கும் தம்பியிடம் பேரம் பேசுவதை நிறுத்தி விட்டேன். பத்து ரூபாய் அதிகமாகக் கொடுத்து விட்டேனே என்று மண்டையை உடைத்துக் கொள்வதில்லை. அவர்கள் மகள்களின் படிப்புச் செலவுக்கு சேமிக்க இது உதவட்டுமே.

4. உணவகங்களில் கூடுதலாக டிப்ஸ் தருகிறேன். அன்றாட வாழ்க்கையை நடத்த, என்னை விட அதிகமாகப் போராடும் சர்வர் முகம் மலரலாம்.

5. 'எத்தனை தடவை இந்தக் கதையைச் சொல்லுவீங்க' என்று இப்போதெல்லாம் முதியவர்களிடம் சொல்வதில்லை. அவர்கள் இந்தக் கதைகளால், தமது பழைய நினைவுகளை அசை போடுகிறார்கள்; கடந்த காலத்திலிருந்து விடுபடுகிறார்கள்.

6. சில நேரங்களில் பிறர் சொல்வது தவறு என்று தெரிந்தாலும், அவர்களைத் திருத்தாமலிருக்கக் கற்றுக் கொண்டேன். எல்லோரையும் திருத்தும் பொறுப்பு என்னுடையது அல்ல. எல்லோரும் சரியாக இருக்க வேண்டும் என்பதை விட என் மன அமைதி எனக்கு முக்கியம்.

7. பெருந்தன்மையுடன், தாராளமாகப் பாராட்டுகிறேன். இது, பாராட்டுப் பெறுபவருக்கு மட்டுமல்ல, என்னுடைய மனதுக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது. சின்ன ஆலோசனை - ஒருவர் உங்களைப் பாராட்டும்போது, ஒருபோதும் மறுக்காதீர்கள், நன்றி சொல்லி முழுமையாக ஏற்றுக் கொள்ளுங்கள்

8. என்னுடைய ஆடையில் எண்ணெய்க் கறை பட்டு விட்டால் அலட்டிக் கொள்வதில்லை. தோற்றத்தை விட ஆளுமைதான் உரக்கப் பேசுகிறது.

9. என்னுடைய மதிப்பை உணராதவர்களிடம் இருந்து விலகிப் போகிறேன். அவர்கள் என் மதிப்பை அறியாமல்

இருக்கலாம், நான் அறிவேன்.

10. யாராவது பந்தயத்தில் என்னை முந்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டு, மோசமாகச் செயல் பட்டாலும் நான் நிதானமாகவே இருக்கிறேன். நான் பந்தயத்தில் இல்லை. என் வாழ்க்கையை வாழ்கிறேன்.

11. என் உணர்வுகளை எண்ணி சங்கடப்படாமல் இருக்கக் கற்றுக் கொள்கிறேன். என்னை மனிதனாக்குபவை என் உணர்வுகள் மட்டும்தான்.

12. ஒரு உறவை முறித்துக் கொள்வதை விட, ஈகோ-வை விட்டு விடுவது நல்லது என்று அறிந்து கொண்டுள்ளேன். என் ஈகோ என்னைத் தனிமைப்படுத்தும்; உறவுகளால் நான் தனிமைப்பட்டுப் போக மாட்டேன்.

13. ஒவ்வொரு நாளையும், இறுதி நாளைப் போல வாழக் கற்றுக் கொண்டுள்ளேன். இது கடைசி நாளாகவும் இருக்கலாம்.

14. என்னை மகிழ்ச்சியாக வைத்திருப்பவற்றைச் செய்து கொண்டிருக்கிறேன். என்னுடைய சந்தோசத்திற்கு நான்தான் பொறுப்பு. மகிழ்ச்சி என்பது ஒரு தேர்வு. அதைத் தேர்ந்தெடுத்து எந்த நேரத்திலும் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

**ஷானு மிஃறாஜ்,**
அளுத்கம - இலங்கை

---

## தன்முனைக் கவிதைகள்

நள்ளிரவுப் பூனைகள்
என் வீட்டில் வருவதில்லை...
வறுமை வீட்டின் சமையலறையில்
மீதங்கள் இருப்பதில்லை.

அலைபேசியில் படிக்கிறார்கள்
மின் புத்தகத்தை...
புத்தகத்தை மாற்றிய
காலனி ஆதிக்கம்.

மறதி என்று தலைப்பிட்டு
ஒரு கவிதை எழுதினேன்...
எழுதிய கவிதையை
வைத்த இடம் மறந்துவிட்டது.

**செல்வா ஆறுமுகம்**

## சமையல் சுவையாக வேண்டுமா இதோ டிப்ஸ்

எப்போதுமே சுவையூட்டிகளை சேர்க்காமல் உணவைத் தயாரியுங்கள்!

காளான், வாழைக்காய்த் தோல், வாழைப்பூ,வாழைத்தண்டு, பசளிக்கீரை, சோளம், பொலொஸ் என்று இலங்கையில் அழைக்கப்படும் சின்னப் பலாக்காய் (பிஞ்சு) மூட்டை கொச்சிக்காய் எனப்படும் ஒருவகை நெய்மிளகாய் என்பன இயற்கையிலேயே தனிச்சுவை கொண்டவை.இவற்றில் ஏதாவதொன்றை கொஞ்சமாக கலந்து சமைத்தால் உணவு சுவையாக இருக்கும். தாமரைக் கிழங்கு,ப்ரொக்கோலி என்பனவும் சிறந்த சுவையூட்டிகளாகும்

**வினோதினி**

# சோற்று அல்வா

தேவையானவை
மசிய அரைத்த சோறு 1 கப்
சர்க்கரை 3/4 கப்
தேங்காய்ப்பால் 1/4 கப்
நெய் 1/8 கப்
ஏலப்பொடி 1 தே.க
நெய்யில் வறுத்த முந்திரி

உப்பு ஒரு சிட்டிகை

செய்முறை
அடுப்பில் வாணலியை வைத்து சர்க்கரையில் 1/4 கப் நீர் விட்டு, கொதித்து சர்க்கரை கரைந்ததும் அரைத்த சோறு,உப்பு போட்டு கிளறவும். அடுப்பை மிதமான தீயில் வைத்துக் கொள்ளவும். கலவை கொஞ்சம் கெட்டியாகும் போது தேங்காய்ப்பால் சேர்த்து கிளறி, கொஞ்சம் கொஞ்சமாக நெய்

சேர்க்கவும். ஏலப்பொடி,முந்திரி சேர்த்துக் கலவை கொஞ்சம் இறுகி வருகையில்,நெய் தடவிய தட்டில் கொட்டவும்.12-15 நிமிடங்களில் இந்த சுவையான அல்வாவைத் தயாரிக்கலாம்.

- குரைஷா முஹமட்

## உடல் இளைக்க

- மாதத்திற்கு இருமுறை வாழைத்தண்டு ஜூஸ் குடிக்கலாம்

- இரவில் ஒரு டம்ளர் நீரில் ஒரு தே.க கொத்தமல்லி விதை,ஒரு தே.க சீரகம்,ஒரு தே.க பெருஞ்சீரகம் மூன்றையும் ஊறவிட்டு காலையில் வடிகட்டி அந்த நீரைக் குடித்து வர வேண்டும்

- ஒரு மே.க தயிரில் கைப்பிடியளவு கருவேப்பிலை,ஒரு துண்டு இஞ்சி, ஒரு தே.க சீரகம்,உப்பு சிறிதளவுடன் நீர் சேர்த்து அரைத்து வடிகட்டி தினந்தோறும் குடித்து வர, உடல் இளைக்கும்.

## முடி உதிர்வது நீங்கி அடர்த்தியாக வளர


- கால் லிட்டர் தேங்காய் எண்ணெயில் ஒரு கற்றாழைத்துண்டை நறுக்கிப் போட்டு,சின்ன வெங்காயம் 100கிராம், சிறிது கருவேப்பிலைசேர்த்துக் காய்ச்சி வடிகட்டி, குளிப்பதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன் முடி வேர்க்கால்களில் தடவிவர பலன் கிடைக்கும்.



# றோணியோக்களின் வளர்ச்சி-07

காலத்தோடு கலந்து இலக்கியமணம் பரப்பிவந்த அன்றைய இனிமை நிறைந்த அழகிய நாட்கள். உள்ளங்களோடு குதூகலமாய் உறவாடிய நாட்கள்.கற்பனைக்கு களம் அமைத்துத் தந்த அற்புத காலம். மதங்களுக்கப்பால்

மொழியின் மூலம் ஒன்றுபட்டு ஒற்றுமையோடு கைக்கோர்த்து இலக்கிய பவனி வந்த பசுமை நாட்களை நாமும் கடந்து வந்தோம். றோணியோக்களின் அன்றைய காலம் நாமும் முத்தெடுத்தோம் முழுசாய் மூழ்கிப்போனோம். றோணியோக்களின் வளர்ச்சி என்ற தொடருக்குள் சிக்கியதே ஊர்குருவி. முத்திங்கள் ஏடு முகம்மறைத்த



திருமணம்!

இதயங்கள்-
முடமாகிப் போன
குடும்ப அங்கத்துவங்களில்
நீ மட்டும்-
வித்தியாச மா(ண)னவன்!
இதயச் சிறகை விரித்து
நீ சமத்துவமாக-
சமூகத்தை
நோக்குகையில் கூட
தண்டிக்கப் படுகிறாய்!
பாவம்;
உன்னை விற்று விடத் துடிக்கும்
பெற்ற மனங்களைப்
பிரிய மனமின்றி- நீ
மௌனித்து நிற்கிறது
உனக்கு மட்டும்
கேட்கிறது

உன்னை-
ஆசுவாசப்படுத்தும்
ஏனை-
அனுசரிப்புகளுடன்
நீ-
எந்தவொன்றிற்கும்
வாழப் போகிறாய்;
இந்த-
ஏழைக் கைப்பிடிக்கும்
வேளை...
வராமலே போகலாம்
நாள்- உன்னை
கொள்முதல் பட்டியல்
சேர்க்க மாட்டேன்!
ஏனென்றால்-
கவிதைகள்...
கற்பனையில்தானே
வாழ்கிறார்களாம்!
நானும் நீயும்-
வாழ்ந்து கொண்டு
இ(ரு)றோம்!

பாலியூற்று அஷ்ரபா நூர்தீன்

அண்ணல் பக்கம்: 3

# வரம்!

மௌனத் தவமிருப்பேன்! - வான்ஏற
முத்தி பெற வேண்டும்!
கூனற் பிறைத் தோணி - வந்தெனைக்
கொண்டும் வர வேண்டும்!

-▭-

நீல வானக் கடலில் - வெள்ளியுடன்
நீந்தும் அருள் வேண்டும்!
சோலைக் குயில் போலே - தமிழிற்
கூவும் இசை வேண்டும்!

-▭-

பாடும் தமிழோடு - மாஇறைவன்
பக்கம் வர வேண்டும்!
ஆடும் மயில் போல - கூத்திட
"அழகி" வர வேண்டும்!

-▭-

ஊஞ்சல் அமைத்திடற்கு - வானவில்
ஒன்று வர வேண்டும்!
தீஞ்சுவைப் பாவிசைத்தே - உ[illegible]வரச்
செந்தமிழ்ப் பெண் வேண்டும்!

-▭-

மின்னற் பிளவூடே - அண்டமெல்லாம்
மேவும் வரம் வேண்டும்!
முன்னைக் கடல் கவர்ந்த - கவிப் -
மூழ்கிப் பெற வேண்டும்! - பொருள்.

-▭-

ஓய்ந்த நேரமெல்லாம் - தமிழ்க்கவி
ஓடி வர வேண்டும்!
பாய்ந்து வரும் ஒளியில் - மக்களிடை
பாய விட வேண்டும்!

முகப்பு ஓவியம். இதழ் _1 ஐ விரித்து மணம் பரப்பியுள்ளது. ஜனவரி_மார்ச்_1988 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர் கவிஞர் ஏ.ஏ.அமீர் அலியாகும். கையெழுத்து இதழாக


பறந்துத்திரிந்த ஊர்குருவி இதனூடே றோணியோவில் பயணித்துள்ளது. ஊர்குருவியின் கூட்டுக்குள்ளே கவிப்பூக்களை ரசிப்போம்

வாருங்கள்!
வரம் கவிதை -மர்ஹூம் எம். எஸ்எம்.சாலிஹ்..ஊர்குருவிக்கு இரு வாழ்த்துகள்_கவிஞர் ஏ.எம்.ஏ.கஹ்ஹார்,தாமரைத்தீவான், குறுங்கதை_'தத்ரூபம்' நீர்கொழும்பு நஸ்ரின் நாஸ் தாஹிர்,கவிமனம்-பாலையூற்று அஷ்ரபா நூர்தீன், ஹைக்கூ- எம்.வை.எம்.அலி, குஞ்சுக்கவிதைகள் - தாடி - ரவூப்கான், மீசை_நிரோஸா,

இன்பவேதனை_எம்.ராஜன் நசூர்தீன் நமடகஹவத்த, ஆயுட்கைதி_வி.ஆர். இல்முன்நிஷா,கிண்ணியா_1, வறுமை_நசூஹா ரபீக்கா,. ம(பி) ண வாழ்க்கை- ஜிபாக்கலீல்தீன்,. எங்கள் எதிர்ப்புக்கள் - ஏ.எம். மஹரூப் ,பெரியாற்றுமுனை,. அதிக ஆற்றலுள்ளவன் - ஏ.ஸி .முஹம்மது முஸ்னில் கிண்ணியா_02,.

கவியாற்றல் ஜெனிரா தௌபீக்,. காக்கை போற்கொத்துவதா காசு - கவிஞர் ஏ.எம்.எம்.அலி,. அவளும் கிரிக்கெட்டும் எம்.எஸ் .எம்.நியாஸ்., அகராதி ஐ.ஏ.ஹசன் ஜி, என். செய்யது, கலைக்காதலன்-அக்பர் சலீம்,. சொல்வதெல்லாம் உண்மை_ செல்வி.சசிகலா செல்லத்தம்பி, 'தொடரும் நம் பந்தம்' மூதூர் கபீர் முஹம்மத் சிராஸ்,

முடிவு-மும்தஹினா இல்யாஸ், அன்புத்தொல்லை கலேவெல. எஸ்.எச். அமீன், பேய் கவிஞர். அ.கௌரிதாசன். , தூரத்தில் நீ__ கவிஞர்.ஏ.ஆர். நாகூர், நான் ரசித்த ஹைக்கூ__ பத்மேஸ்வரி கந்தையா,




கவிக்கோ அப்துர் ரஹ்மான்.சிறிய தந்தையின் தாலாட்டுப் பாடல் ஊர்க்குருவி, இது உங்கள் பக்கம் அபூஉபைதா மௌஜூத், நூல்,லேஸ்,

பொத்தான்கள். விளம்பரங்கள்...
முகவரி
ஊர்க்குருவி.
ஏ.ஏ. அமிர்அலி
கிண்ணியா._02

மீண்டும் ஒரு றோணியோவுடன் அடுத்த இதழில் சந்திப்போம்
எஸ்.யூ.கமர்ஜான்பீபீ,
(J.P) ஹுனுப்பிட்டிய, வத்தளை.



## அன்பின் பிடியில் மனதின் தேடல்

அன்பின் பிடியில்
மனதின் தேடல்
பிரிவுகள் வந்திடில்
தொடருமே ஊடல்

நாட்கள் நீண்டிட்டால்
வந்திடுமே வாடல்
மனங்கள் ஒன்றித்தால்
கண்டிடுமே கூடல்

உள்ளங்கள் இணைந்து
உருவங்கள் பிணைந்திடும்
பிரியாத பந்தத்தை
உறவுகள் தந்திடும்

உயிரோடு உயிராக
இதயங்கள் கலந்திடும்
சமயத்தில் அதுவே
இடமாறித் துடித்திடும்

கனவுகளில் தினமும்
காதலாய் மிதந்திடும்
நெஞ்சில் ஓவியமாய்
ஆழவும் பதிந்திடும்

ஒருயிராய் மாறிட்டால்
மகிழ்ச்சியில் திளைத்திடும்
துணையது நீங்கிட்டால்
அன்றிலாய்த் தவித்திடும்

**பர்ஹத் றியா**
ஏறாவூர்
இலங்கை

## தரணி ஆளும் தமிழே வாழி

உயிரும் மெய்யுமாய்
உரமதை உணர்ந்திடும்,
வாண்மையின் தண்மையிற்
தரணியாளும் தமிழேவாழி!

பரணியில் பண்பாடும்
வரமெனும் வண்டமிழே!
கரங்களில் தவழ்ந்திடும்
கனித்தமிழ் கன்னியே!

மறத்தமிழ் மாந்தரின்
மங்காத மணிமொழியே!
குறளடியிற் குன்றிடாமற்
கொட்டுது செந்தேனையே!

பாவலரும் பூக்களாய்ப்
பாக்கள் புனைந்திடப்,
புதுமணம் பரப்பிடும்
பூந்தமிழ் பொன்மலரே!

**கிண்ணியா சபீனா**

## நேரிசை வெண்பா

ஒற்றுமை ஒற்றுமை என்றே உரைத்தவர்
வேற்றுமை வித்தினை வீசிடுவார் - மற்றோர்
இனத்தினை சீண்டியே இன்பமும் கொள்தல்
மனத்தினில் நீக்கிடில் மாண்பு.

**மணிக்கூ கவி செய்னுலாப்தீன் நஸீரா**
ஏறாவூர், இலங்கை.

# வானம்

ஆனந்தக் கண்ணீராய்
மழை பொழியும்.
வெப்பம் தருவதாகச் சொல்லி
மண் பிளக்கக் காயும்.
வெளிச்சம் தரும்
இருட்டை உமிழும்.
சூரியனை ஏழு

குதிரைகள்
பூட்டிய ரதத்தில்
பவனிவரச் செய்யும்
அதை
இரவு தோறும் ஒளித்து வைத்து
பூமியுடன்
கண்ணாமூச்சி ஆடும்.

நிலவைக் கூட்டும் குறைக்கும்
முழுமதி ஆக்கும்.
ஒருநாள் காணாமல் செய்யும்.
பகலில்

நட்சத்திரங்களைத் தின்று
இரவில் கக்கும்.
விரும்பினால் மேகங்களை
ஆடையாய் அணியும்
இல்லையேல்
அம்மணமாய்க் கிடக்கும்.
அதனிடமுள்ள
நிறங்களைக் கொண்டு
தூரிகையின்றி நவீன ஓவியங்கள்
தீட்டிக் கொள்ளும்.

காலையும் மாலையும்
பூப்பெய்திய பெண்ணாய்
மஞ்சள் நீராடும்.

வழக்கமாக நீலப்பொடியில்
ஒப்பனைச் செய்து கொள்ளும்.
மின்னல் கோலம் போடும்
இடி என்ற பேரில்

சிம்மமாய்க் கர்ஜிக்கும்
மதம் பிடித்த வேழமாய்ப் பிளிரும்.
ஏழு வண்ண வில்லுக்கு
பூமியை நாணாக்கும்.
வனங்களோடு பேசும்
மலைகளோடு கொஞ்சும் குலாவும்.
உருவமற்ற
காற்றுக்குத் தாய்வீடாகும்

மாசுக்கும் தூசுக்கும்
பகையான நீச்சவீடாகும்.

ஓர் எல்லைவரை
பறவைகளைப் பறக்க விட்டு
தாதியாய்த் தாலாட்டும்.
விமானங்களைப் பாதையின்றி
பயணிக்கச் செய்யும்.
செயற்கை கோள்களையும்
ஏவுகணைகளையும்
தாய்மடியாய் தன்கூட்டுக்குள்

மறுப்பின்றி அனுமதிக்கும்.

பார்ப்போரை ஆச்சரியத்தில்
வியக்கச் செய்யும்.
விஞ்ஞானிகளுக்குத் தீர்வில்லா
தேடலைத் தரும் அண்டம்.
அறிவியலார்க்கு
அள்ள அள்ளக் குறையாத
அதிசய அட்சயப் பாத்திரம்.
ஜோதிடர்களுக்கும் சாஸ்திர
வல்லுநர்களுக்கும் கோள்

மண்டலம்.

கருவறையின்றி பிறந்த
ஒரு தாய்க் கடவுள்.
பல கோடி ஆண்டுகளாகியும்
இறக்கும் வரம்
வாங்கி வராத ஜீவன்.
அது...
மரணித்தவருக்கு விண்ணுலகம்
ஆத்திகருக்கு தேவலோகம்.

**பாரியன்பன் நாகராஜன்**
குடியாத்தம் - 632602

# இனிய வாழ்வியலுக்காய்

**அன்ஷியா**
**கிண்ணியா**

வாழ்க்கையில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு நபரும் ஏதாவது படிப்பினைகளைக் கற்றுக்கொடுத்து செல்கிறார்கள். அதிலிருந்து நல்லதையும் கெட்டதையும் நாம்

பகுத்தறிந்து பயன்படுத்துதல் வேண்டும். விமர்சனங்கள் மூலம் முன்னேற்றத்திற்கான பாதைகளை அமைத்துக் கொடுக்கிறார்கள் ஒரு சிலர். இன்னும் சிலர் புறக்கணித்தல் மூலமும் புதுயுகம் காண்பதற்கு புனரமைத்து கொடுக்கிறார்கள். தமக்கென எதுவுமே செய்திடாது தன்னருகே நற்பலன் பற்றிய கரிசனைகளை

தெளித்தவாறு நடித்துக் கொண்டிருக்கும் நபர்களும் உண்டு. மறுபுறத்தில் தமக்காக மகாப் பெரும் தியாகங்களை பாரபட்சமின்றி மேற்கொண்டு எதுவும் செய்திடாதவாறு இருக்கும் இயல்பான குணவாசிகள். அதுமட்டு மின்றி ஆசைகளை ஊட்டி அடிக்கடி நோவினைக்கு உட்படுத்தும் அரக்கர் களும் கூட இருப்பார்கள்.

இவ்வாறான புரிதலுடனும் புறக்கணித்தல் மூலமும் எமக்கு உதவியாகவும் இருக்கிறார்கள் பலர். அவைகளிலும் இருந்து தமக்கான தகுதிகளை தாமே வளர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறான தைரியமும் தன்னம்பிக்கையும் முயற்சியும் நமக்குள் இருக்குமானால்,

இவ்வையகத்தில் தங்களை விட சிறந்த வெற்றியாளன் இல்லை.

உங்களின் வளர்ச்சிக்கு தேவையான உரமும் நீங்கள் தான் என் பதை நினைவிற் கொள்ளுங்கள் உள்ளத் தில் உறுதியாக நில்லுங்கள்! உங்களை வீழ்த்த வில்லும் சற்று பயந்து கொள்ளும். ஒவ்வொருவரின் சந்திப்பு மூலம் சரிந்து விழுந்திடாது,

சக்தியினை பெற்றுக் கொள்ள கற்றுக்கொள்ளுங்கள்.

பயனுள்ள பலவிடயங்களை, பலருக்கு வாழ்வில் அன்போடும் பண்போடும் பகிர்ந்து செல்லுங்கள்.

எளிது எளிது! வாழ்தல் எளிது!

நேர்மறை சிந்தனைகள்
இனியும் தொடரும்....

## நேரிசை வெண்பா

ஒற்றுமை ஒற்றுமை
என்றே உரைத்தவர்
அற்றெமை விட்டே
அகன்றிடுவார் - மற்றோர்
சமூகத்தை சீண்டியே
சந்ததி சேர்தல்
சுமுகமா என்றுநீ
சொல்.

**தமிழ்நெஞ்சம் அமின்**



# புலரும் விடியலிலே...

## கவிமகள் ஜெயவதி

சோவெனும் மழைச்சத்தம் சுருட்டிய போர்வையில் உறங்கியவளை எங்கெங்கோ அழைத்துச் சென்றது.

அன்றைய தினம் ஞாயிறு விடுமுறைநாள் ஆதலால் அவள் நீண்ட நேரம் உறங்குவதை வழக்கமாக்கியிருந்தாள் அன்று மழைவேறு அவள் தூக்க நேரத்தை அதிகரிக்கச் செய்தது அவள் மீண்டும் கண்களை இறுக மூடுகிறாள்.

சில்லென்ற குளிர் அம்மாவின் முந்தானையில் அரைகுறையாய் தனை இழுத்து மூடி அம்மாவின் ஒட்டிய வயிற்றில் தனை முழு வதுமாய் ஒளிய வைக்க முயன்று தோற்றவளாய்த் தூங்கும் திருமுகையை தன் இரு கரங்களால் இழுத்து அணைத்த பொன்னியின் மனதில் ஆயிரம் எண்ணங்கள் நிழலாடியது.

பொறுப்பற்ற கணவனுடன் போராடும் வாழ்க்கை என் ஐந்து குழந்தைகளையும் எவ்வாறு கரை சேர்க்கப் போகிறேன் எனும் துக்கம் தொண்டையை அடைக்க குபீரென கொப்பளித்த கண்ணீரை துடைத்து இருளகலும் வரை இமைமூடி உறங்குகிறாள்.

பிரபஞ்சப் பூச்செடி பிறப்பெடுப்பதற்காய் மொட்டு விரியத் தொடங்கியது. பருவப் பெண்ணின் பூசி மெழுகிய கன்னங்களில் பளீரெனத் தெரியும் பருக்கள் போல பச்சை பசேலென்ற புல்லின் மேல் பனித் துளிகள் படர்ந்து கிடக்க, பளிங்கு நிற வானத்தில் தன்னைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளையை பேதைப் பெண்ணொருத்தி கன்னங்கள் சிவக்க கதவருகே ஒட்டி ஒளிந்து பார்ப்பதுபோல், மஞ்சள் நிறக் கதிரவன் மேகத்திரை விலக்கி மெதுவாக வந்துகொண்டிருக்க கூட்டுக்குள்ளே கிடந்த சேவல் ஒன்று தன்னை விட வீரனில்லை எனும் தொனியில் தன் குரல்வளை கிழியக் கத்திக் கூவ விருந்தினரை வரவேற்க சிம்மாசனமாய்க் கட்டிவைத்திருந்த சின்ன விறாந்தைக் கட்டில் நுளம்பை விரட்டியடிக்க வைக்கப்பட்டிருந்த புகைச் சட்டியருகே சுருண்டு கிடந்த பப்பியும் சோம்பல் முறித்தெழுந்து

சூடான இடந்தேடி சுத்திச் சுத்திவந்தது.

கடப்படிக் கட்டையின் மேல் காக மொன்று கா கா வென காதுகிழியக் கரைய, புலரும் விடியலாவது புதிதாய் விடியாதா எனும் ஏக்கத்தோடு அருகே கிடந்த குழந்தைகளை அமைதியாகத் தூங்க விட்டு அசைவின்றி எழுந்து வெளியே வருகிறாள். அம்மாவின் சூட்டில் அணைத்துக்கிடந்த திருமுகையும் முந்தானையின் நுனிபிடித்து முனகிய வாறு வருகிறாள்.

கடலும் கடல்சார்ந்த இடமு மது. அதிக குளிர் நடுக்கம் திருமுகை பத்துவயது நிரம்பாத குழந்தை யாதலால், இரவில் தூங்கும் போது கைகளற்ற குட்டியான பனியன் மட்டுமே அணிந்திருப்பாள்.

பொன்னம்மா பரபரப்பாக விறகு முறித்து அடுப்பில் அடுக்கி வெந்நீர் பானையை தூக்கிவைக்க அச்சூட்டில் ஒட்டிக்கொள்கிறாள் அடுக்களையில் ஒட்டிய பல்லிபோல திருமுகை.

"கொஞ்சம் தள்ளிப்போம்மா! சட்டை யில நெருப்பு பத்திக்கப் போகுது ஐயோ இந்தபுள்ள எவ்ளோ சொன்னா லும் கேட்காது அடியேய்! கொஞ்சம் தள்ளித்தான் இரன்" என பொன்னம்மா புலம்பலைத் தொடங்கினாள்.

தூக்கத்தில் கிடந்த குழந்தைகள் மண்ணிலிருந்து குளிரில் வெளியே வரும் ஈசல்போல ஒவ்வொன்றாக வரத்தொடங்கினர்.

கண்ணைக் கசக்கியவாறு வந்த குழந்தைகளின் கையில் தேனீர் கோப்பை யினை தந்தவளாய் கட்டளை யிடுகிறாள் பொன்னம்மா.

''செல்லங்களா கெதியா தேத் தண்ணிய குடிச்சிற்று பல்லை துலக் குங்கோ அம்மா குளிக்க வார்த்து சாப் பாட்டையும் தந்திற்று தோட்டத்து பயிர்களுக்கு தண்ணி வார்க்க போறன் அந்த பயிர் பச்சைகள் சிரிச்சாத்தான் நாம சிரிக்க முடியும்'' என புலம்பியவாறு... மளமளவென தேனீர் கோப்பை களை அலசி வைத்தவளாய் குழந்தை களையும் பசியாற்றி பள்ளிக்கு அனுப்பி வைத்து வேக வேகமாக பயிர் தோட்டத்திற்குள் ஓடுகிறாள்.

பயற்றையும் கத்தரியும் கொச்சியும் தக்காளியுமென அத்தனையும் விதைத்து வைத்திருந்தாள் அவை

அவளை பார்த்து அழுவது போல இருந்தது நீர் கேட்டு வேக வேகமாக இடுப்பில் குடத்தை சுமந்து பூவலில் நீரை அள்ளி பயிர்களின் முகங்களில் தெளிக்க தொடங்கிய பொன்னியின் மனதில் பல யோசனைகள் "புது வருசம் வேற வருது பிள்ளையள் அத்தினையும் புது வகுப்புக்கு போறாங்க புது சட்ட புது புத்தகப்பை கொப்பி சப்பாத்து இப்பிடி எல்லாமே வாங்கணும் தைப் பொங்கல் வேற வருது உடுப்பும் வாங்க ணும் கடவுளே என்ன செய்ய போறன் நான் எனக்கெண்டால் தெரியல்ல இந்த அரசாங்கம் வேற விலவாசிய ஏத்தி சாவடிக்கிது எப்படி யாவது நாட்டு மக்களின் நிலை பற்றி யோசிக்கிதா இந்த அரசாங்கம்? பணக்காரர் வாழ்றாங்க ஏழைகள் எங்க போவாங்க" என தன்னந்தனியாக தனக்குள்ளேயே பேசி பெருமூச்சு விட்ட வளாய் தான் அழுதாலும்தன்அத்தனைகனவுகளையும் நனவாக்கும் அச் செடிகளை சிரிக்க வைக்க நம்பிக்கையுடன் முயற்சி செய்து கொண்டிருந்தாள் பொன்னம்மா.

# அழகிய
# இலங்கை அழைக்கிறது...

கறுப்புத் திரைக்குள் இருக்கும் தேசம்
வெறுப்பு வளைக்குள் புதைந்தது பாசம்
நெருப்பு வார்த்தைகளில் வெந்தது நேசம்
இருப்பாய் இருந்ததோ முழுதாய் வேசம்.

அரசியல் சாக்கடை நாற்றம் ஒழிப்போம்
அறவழியில் பூக்கூடை போல மணப்போம்
கருத்து முரண்பாடுகளைப் பேசித் தீர்ப்போம்
ஒருவர் பண்பாடு ஒருவர் மதிப்போம்

இனங்களால் பிரிவுகள் இனியும் வேண்டாம்
குணங்களால் இணைவோம் குதர்க்கம்

வேண்டாம்
பணத்திற்காய் இனி விலைபோக வேண்டாம்
தினமொரு பிரச்சினை எழுப்பிட வேண்டாம்.

சுயநலத் தலைமைகள் ஒதுக்குதல் நன்று
சுயத்தினில் சிறந்தவர் தேடுவோம் இன்று
இயல்பதில் உதவுவோர் காட்டுவார் வென்று
அயல்தேசமும் ஏங்கட்டும் எமைப் போல
சிறக்கனும் என்று.

கற்றவர் கரங்களே தலைமைக் கழகு
மற்றவருடன் சேர்ந்து ஒத்துழைக்கப் பழகு
நற்பணித் தொண்டுகள்
நாட்டுக் கழகு
வெற்றியின் பாதை ஆகிடும் இலகு

சூழ்ச்சியின் முகவரி முழுதாய் மூடு
ஆட்சியின் முதல்வரி ஐக்கியம் எனப் பாடு
மீட்சியின் பாதையில் நல்லன தேடு

மாட்சிமை ஓங்கிட பெயர் பெறும் என் நாடு

**மக்கொனையூராள்**

# புலருமா விடியல்
# புத்தாண்டே கூறாய்....

இலங்கை நாடோ
இன்னலில் தவிக்குது
இன்பங்கள் ஏதும்
இன்றியே துடிக்குது

நோயால் வாடி
நுகர்வுக்காய் ஓடி
நொந்தே போகிறோம்
வெந்தே சாகிறோம்

விலையேற்றம் வாட்ட
வெந்தீயினை மூட்ட
விளக்கினைத் தேடும்
விட்டிலென ஆகிறோம்

மாவின் விலையோ
மலைத்திட வைக்க
மஞ்சளின் மாற்றம்
மரணத்தைச் சொல்ல

அதிகரித்த அரிசிவிலை
அல்லாட வைக்க

அத்தியாவசியம் எல்லாம்
அநாவசியம் ஆக

எரிபொருள் விலையால்
ஏங்கியே நிற்கிறோம்
எங்கே வாழ்க்கையென
இறைவனைக் கேட்கிறோம்

புலராத விடியலை
புலம்பியே விடியவைக்க
புனிதங்கள் சுமக்கின்ற
புத்தாண்டே வாராயோ !!

விலைவாசி ஏற்றம்
விரைந்தே குறைந்திட
அரைவாசி மக்கள்
அமைதியோடு வாழ்ந்திட

அத்தியாவசியம் எல்லாம்
அற்புதமாய் நிறைய
அழிவுகள் எல்லாம்
ஆயுளற்றுப் போக

பசியின்றி வாழ
பாலரிங்கே சிரிக்க
கலகங்கள் மறைய
கல்வியோ சிறக்க

விலைவாசி குறைய
விரக்திகளும் மறைய

அலைபேசித் தேவை
அதிசயமாய்க் குறைய

அவலங்கள் மாற
அகங்களெல்லாம் தேற
புலமைகளும் வாழ
புன்சிரிப்பாய் வாராய் !!!

நாடு சிறக்க
நல்லதே நடக்க
தேரில் வாராயோ
தெய்வீகப் புத்தாண்டே !!!

**A. விமல்ராஜ்**



# நலாஸ் கடை ஆப்பமும் தேங்காய் பாலும்

நௌஷாத்கான் லி

வாழ்க்கைல நாம்ம எப்போதும் ஒரே மாதிரியே இருக்கிறதில்லை. சில நேரங்களில் நம் சுயம் கூட கால ஓட்டத்தால் ,நாம் பழகும் மனிதர்களால் மாற்றப் படும் அல்லது நம்மை சுற்றியுள்ள சந்தர்ப்பங்களால் மாற்றப் படும்.சில நேரங்களில் நீங்கள் செய்யும் விஷயங்கள் அந்த காலகட்டத்தில் சரின்னு பட்டாலும் ஒரிஜினாலிட்டி இல்லாமல் போலித் தனமாய் நீங்கள் நடந்து கொள்வது உங்களை நீங்களே ஏமாற்றி கொள்வதற்கு சமம்.

விஸ்காம் படிச்சிட்டு சினிமாவுல பெருசா புடுங்கிடணும்னு ஆசைப்பட்டேன் ஆசையெல்லாம் நிஜத்துல நிராசையா தான் போகும்னு புரிஞ்சுக்கிட்டேன். அப்பா அம்மா அவங்க ஆசைப்பட்ட மாதிரி பி .காம் தான் படிக்க வச்சாங்க அவங்க பி.காம் படிக்க வச்சாலும் அதற்க்கு மேல சென்னையில் அல்லது பெங்களூரில் பெரிய யுனிவர்சிட்டியில் எம். பி.ஏ முடிச்சிட்டு ஏதாவது ஒரு எம். என்.சி கம்பெனியில் நல்ல சம்பளத்துல செட்டிலாகனும்னு நினைச்சேன். நான் நினைச்சமாதிரி எம் .பி .ஏ படிக்க வைக்க எங்க வீட்ல ஆசையிருந்தாலும் படிக்க வைக்க வசதி இல்லாத காரணத்தாலே பி.காமோட என் படிப்புக்கு முற்று புள்ளியானது. ஓரளவு உள்ளூர்ல அதிக சம்பளம் சம்பாதிக்கணும்னா மார்க்கெட்டிங் வேலைல தான் கிடைக்கும். பணத்துக்காக அட்லீஸ்ட் தொலைதூர கல்வி மூலமாவது எம். பி .ஏ படிக்க எனக்கு பிடிக்காத மார்க்கெட்டிங் வேலையில் சேர்ந்தேன் .. வேலையில் சேர்ந்த முதல் மாத சம்பளத்தில் எம்.பி.ஏ.

தொலைதூர கல்வியில் சேர்ந்தேன். ஒரு புறம் படிப்பு, ஒரு புறம் வேலை என்று வாழ்க்கை சக்கரமாய் சுழல தொடங்கியது. தினம் ஒரு ஊர், ஊர் குருவியாய் தினம் தினம் ஒரு ஊர் அலைந்தேன். நாய் பொழப்பு என்பது மார்க்கெட்டிங் துறை தான் என்பதை அனுபவத்தால் உணர்ந்து கொண்டேன். சார், ஜி, அக்கா, சிஸ்டர், மேடம், அண்ணா என்று விற்பனைக்காக வேண்டி எவ்வளவு போலி புன்னகைகளை உதிர்த்து, பல அவமானங்களுக்கிடையில் சில இடங்களில் தன்மானத்தையும் இழந்து பணம் சம்பாதிக்க வேண்டி இருந்தது .. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊர் ,தினம் தினம் ஒவ்வொரு ஊரில் தண்ணீர், ஹோட்டல் சாப்பாடு, களைப்பில் பெப்சி, கோக் குடித்ததன் விளைவு வயிற்றில் அல்சர். அந்த அல்சரோடு என் எம். பி.ஏ. படிப்பை முடிப்பதற்காக சகித்து கொண்டு வேலை செய்தேன். இரவில் லேட்டாக தான் வீட்டிற்கு வருவேன் கடையில் சாப்பிட்டு வந்தாலும் உனக்காக உலை வச்சேன் சோறு வீணாப் போகுது என்பாள் அம்மா, தண்ணி ஊத்தி வை என்பேன். தண்ணி ஊத்துனா காலையில யாருடா சாப்பிடுவா என்பாள். இரவு சாப்பிடாம வந்தா சோற்றை எடுத்து வைத்து விட்டு காக்கா,குருவி தூங்குற நேரத்துல வர்ற, உனக்கு கதவு தொறந்து விட்டு சோறு வைக்குறதாலே எனக்கு தூக்கமே போயிடுது, உன்னாலே எனக்கு உடம்பு முடியாம போயிடுது என்பாள் அம்மா... அந்த சோற்றை ஒரு வாய் உள்வைக்கும் போது சொல்வாள் ஊர்ல உள்ளதை எல்லாம் பாரு வெளிநாடு போய் வீடு, வாசல்னு கட்டி கல்யாணம் பண்ணி குழந்தை குட்டியோட வாழுது அவ்வளவு ஏன் உன் தோஸ்த்து மாலிக் போய் அஞ்சு வருஷம் தான் ஆச்சு, வீட்டை கட்டினான், கல்யாணம் பண்ணான் இப்ப பாரு குழந்தை, குட்டின்னு நல்லா இருக்கான். உனக்கு புத்தி வராது... கவிதை, கதை, சினிமா, படிப்புனு பணத்தோட மதிப்பு தெரியாம உள்ளூர்லேயே குதிரை ஓட்டினா எப்படிடா நீ உருப்படுவ என்று அவள் சொன்ன அடுத்த நொடி சாப்பாடு தட்டு சுவற்றில் பறந்தது...

அதன் பிறகு மேன்ஷனில் தங்கி கொண்டு ஒரு வழியாக எம்.பி.ஏ. முடித்தேன் அதன் பின் உறவினர் ஒருவர் மூலம் விசிட் விசா எடுத்து

# கிராமியக் கவிதை

நீலப் பட்டாட - எந்தன்
நெஞ்ச மயக்குதடீ.
கோலமிடும் கால் விரல்கள்
குனிந்து முத்தமிடக் கோருதடீ
நாணம்கொண்ட வதனமது
நளினமா நயக்குதடீ
கோணி நிற்கும் இடையதனில்
கொடிபடரத் துடிக்குதடீ.

கார்கூந்தல் களைபெறவே
பூச்சரமுங் குலுங்குதடீ
கைவளைகள் கலகலென
கானமொன்று இசைக்குதடீ
நிறைசெல்வம் உனயணைக்க
நித்தம்மனம் தவிக்குதடீ
கணந்தோறும் காத்திருக்கேன்
கனிமொழிநீ கூறிடடீ.

மணிக்கூ கவி ஹாஜியானி
செய்னுலாப்தீன் நஸீரா.
ஏறாவூர்,
இலங்கை.

துபாய் வந்தேன். அப்பா என் மீது உயிரையே வைத்திருந்தார் அம்மாவுக்கும் பாசம் அதிகம் ஆனால் அவ கூட பொறந்ததுங்க எல்லாம் வசதி வாய்ப்பா இருக்கு, அவங்க எல்லாம் வசதி வாய்ப்பா இருக்குறது பிரச்சனையில்லை ஏதாவது ஒரு விசேஷத்துல வந்து அதுங்க குத்தி காட்டுறது இருக்குமே அது ஒரு ஆயிரம் கத்தியை நெஞ்சுல குத்துற மாதிரி இருக்கும் அக்கா தங்கச்சி புள்ளைங்க மாதிரி வசதி வாய்ப்பா நான் இருக்கணும்னு அம்மா ஆசைப்பட்ட, என்னை பொறுத்தவரைக்கும் ஊர் உலகத்துக்காக வாழ கூடாது, நமக்காக, நம் மனசுக்கு பிடிச்ச மாதிரி வாழணும் அவ்வளவு தான். அப்பா கூட சொல்வார், டே யூசூப் ஒரு மூணு வருஷம் பல்லை கடிச்சுக்கிட்டு அந்த ஊர்ல இரு என்றார். ஏதோ படிச்ச படிப்புக்கு ஏத்த மாதிரி வேலை இல்லைன்னாலும் கம்பியூட்டர் முன்னாடி உட்கார்ந்து வேலை செய்யுற மாதிரி ஒரு வேலை ,ஆனா அப்பா சொன்ன அந்த மூணு வருசத்துல இமயத்தை எல்லாம் புரட்ட முடியாதுன்னு புரிஞ்சுக்கிட்டேன் ..எனக்கு பக்க பலமா இருந்த அப்பா மஞ்சள் காமாலையில் கல்லீரல் -மண்ணீரல் பாதிக்க பட்டு சென்னையில் ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார் அதன் பின் பல லட்சம் கடனை வாங்கி செலவு செஞ்சும் அவருடைய உயிரில்லாத உடல் மட்டும் தான் கிடைத்தது... அப்பாவின் மருத்துவத்துக்காக வாங்கிய கடன், வீடு கட்டும் கனவுக்காக உழைத்ததில் என்னுடைய பத்து வருடம் முடிவு பெற்று இருந்தது. என்னுடைய முப்பது வயது இறுதியில் தான் அம்மா அவங்க இஷடப் படி பெண் பார்த்து திருமணமும் நடந்தது. அம்மா, தங்கை தவிர நான் பார்த்த ஒரு சில பெண்களால் மற்ற பெண்கள் மீது அவ்வளவாக அபிப்ராயம் இல்லை. சின்ன வயசிலிருந்தே குழந்தை பைத்தியம் நல்லா படிச்சு நல்லா வேலையில சேர்ந்து ,மனசுக்கு பிடிச்ச மாதிரி ஒரு பொண்ணை லவ் பண்ணி கல்யாணம் பண்ணி நிறைய குழந்தைகளை பெத்துக்கணும்னு ஆசைப்பட்டேன் ஆனா என் ஆசையெல்லாம் நிராசையா தான் போச்சு. தங்கச்சியின் வாழ்க்கைக்காக சொல்லாமலே என் காதல் என் மனசுக்குள்ளேயே பொசுங்கி போச்சு. கடவுள் நல்லவனை தான் அதிகம் சோதிப்பார்னு புரிஞ்சுக்கிட்டேன். சின்ன வயசிலிருந்தே புக, மதுன்னு ஒரு கெட்ட பழக்கமும் கிடையாது. ஏன்னா இந்த கெட்ட பழக்கமெல்லாம் இருந்துச்சுன்னா குழந்தை பொறக்காதுன்னு நான் படிச்சு இருக்கேன் ..என்ன தான் எண்ணெய்யை தடவிக்கிட்டு மண்ணுல புரண்டாலும் ஒட்டுற மண் தான் ஒட்டும்னு புரிஞ்சுக்கிட்டேன், கடவுள் நம்ம தலையில என்ன எழுதி இருக்கிறானோ அது நடந்தே தீரும். முதல் குழந்தை ஏழு மாதத்தில் என் மனைவி வயிற்றிலேயே இறந்து விட்டது, என் மனைவிக்கு ஒரு சில குறைகள் இருப்பதால் தான் அந்த நிகழ்வு நடந்தது என்பதை புரிந்து கொண்டேன் இருந்தாலும் குழந்தை ஆசையில் ஒரு சில லட்சம் செலவு பண்ணி என் மனைவியின் குறைகளை நிவர்த்தி பண்ணி பல இக்கட்டான சூழ்நிலையில் அவள் இரண்டாவது குழந்தையை கருவுற்றிருந்தாள். டாக்டர் பல விதிமுறைகளை கூறியும் அவற்றை எல்லாம் பின் பற்றாமல் அவள் இஷ்டத்துக்கு அவளுக்கு எது பிடிக்குமோ (தீயவையாக

இருந்தாலும், வயிற்றிலுள்ள குழந்தைக்கு கெடுதல் என்றாலும்) அதை தான் செய்தாள். டாக்டர் கீரை, காய்கறிகள், பழங்கள் தினமும் சாப்பிட சொன்னார்கள் அவள் ஒரு நாளும் அதை காதில் போட்டு கொண்டதே இல்லை ,அவள் நாக்குக்கு எது பிடிக்குமோ அதை வளைத்து வளைத்து சாப்பிட்டாள்.. மக்ரோனி, மேகி, கொத்து பரோட்டா, சன்னா மிர்ச்சி மசாலா, காரமான ஊறுகாய், நண்டு, இறால், காடை, பேக்கரி வகைகள், ஸ்வீட்ஸ் இதை தான் சாப்பிட கூடாது என்று சொன்னாலும் அடம் பிடித்து அவள் இஷ்டத்துக்கு ஆட்டம் போட்டு சாப்பிட்டாள், வயிற்றில் என் குழந்தை வளர்கிறது என்ற ஒரு காரணத்திற்க்காக அவள் ஆடுவதற்கு எல்லாம் தலையாட்டினேன். அந்த ஒன்பது மாதத்தில் ஒரு ஐம்பது தடவையாவது ஆஸ்ப்பிட்டல் பெட்டில் அட்மிட் ஆகி இருப்பாள். டாக்டர் கொடுத்த நாட்களுக்கு ஒரு மாதத்திற்கு முன்பே குழந்தை பிறந்தது அதுவும் எடை மிகவும் குறைவாக,இடது கால் வளைந்து குழந்தை பிறந்து இருந்தது. நான் ஒன்றும் பெரிய டாட்டவோ-பிர்லாவோ கிடையாது மாத சம்பளத்தில் குடும்பம் நடத்துபவன் ஒவ்வொருத்தன் மாமனார்-மாமியார் வீட்டையே மொட்டை அடிப்பானுங்க எனக்கு அதில் எல்லாம் உடன் பாடு கிடையாது. நான் ஐந்து பவுன் மகர் கொடுத்து என் சொந்த காசில் குறைந்தது மூன்று லட்சம் செலவு செய்து (மாமியார் வீட்டுக்கு செலவு வைக்காமல்) திருமணம் செய்தேன் அவள் எங்களை போல மிடில் கிளாஸ் குடும்பம் என்ற ஒரே காரணத்திற்க்காக தான் திருமணம் செய்தேன். அம்மாவையும் - வீட்டையும் பராமரித்து சமையல் செய்தால் போதும் என்று நினைத்தேன். மிடில் கிளாஸ் குடும்பத்தை சேர்ந்தவள் கொஞ்சம் கட்டு சிட்டாக குடும்பத்தை நடத்துவாள், படித்த பெண் கொஞ்சம் பொறுப்போடு இருப்பாள் என்று நினைத்தேன் என் நினைப்பெல்லாம் தவிடு பொடியாய் போனது வயதான காலத்தில் அம்மா தான் இழுத்து போட்டு வேலை செஞ்சாங்க, கோபப்பட்டு பேசினால் மட்டும் ஏதோ கடமைக்கு அவள் வேலை செய்வாள் அவளிடத்தில் பேசி சமாளிக்கவும் முடியவில்லை, அவளிடத்தில் கோபம் - ஈகோ அதிகமாகவே இருந்தது. குழந்தை பிறந்த ஒரே காரணத்துக்காக அவளுடன் சகித்து கொண்டு வாழ்கிறேன், அதுவும் கர்ப்ப காலத்தில் அவள் எந்த வேலையும் செய்யாமல் இருந்ததாலும், முறையான உணவு எடுத்துக் கொள்ளாததாலும் மற்றும் அவளது வனக்குறைவாலும், அலட்சியத்தாலும் தான் குழந்தைக்கு இடது கால் அப்படி வளைந்து இருந்தது. டாக்டர் கவலைப்படாதீங்க குழந்தை வளருவதற்கு முன்னாடியே ரெண்டு மாவு கட்டு அதிலும் சரியாகா விட்டால் காலை நேராக்குவதற்கு ஷூ அதிலும் சரியாகா விட்டால் காலில் சின்ன ஆபரேஷன் செய்தால் சரியாகி விடும் என்றனர். காசு கூட எப்படியாவது சம்பாதித்து விடலாம் ஆனால் எனக்கு பிறந்த பெண் குழந்தையின் கால் தான் முக்கியம். ஆண்டவா என் குழந்தைக்கு நல்ல படியா காலை சரியாக்கு, அப்படி சரியாக்குனா சட்டி சோறு ஊரு முழுதும் தரேன்னு வேண்டிக்கிட்டேன், குழந்தை பொறந்த போதே ஹக்கிக்காவாக ஒரு ஆடு அக்கீகா கொடுத்து

விட்டேன். பணம் ஒரு புறம் செலவு ஆனாலும் என் குழந்தை காலில் கட்டு போடும் போதும் அதை பிரிக்கும் போதும் அந்த ஒரு மாதத்து குழந்தை கத்துவது,அழுவது என் ஈரக்குலையை சுக்கு நூறாய் கிழித்து போட்டது அந்த நேரங்களில் மனைவி மீது வெறுப்பு தலைக்கு மேல் வரும், இருந்தாலும் என் குழந்தையை பெற்று கொடுத்திருக்கிறாள் என்ற ஒரே காரணத்திற்க்காக வந்த கோபத்தை என் காலுக்கு கீழ் போட்டு விட்டு நகர்வேன் ஆனால் ஒன்று அந்த ஆண்டவன் தான் என் மனைவிக்கு நல்ல புத்தியை கொடுக்க வேண்டும். காலம் அவளை மாற்றும் என்ற நம்பிக்கையில் தான் என் வாழ்க்கை செல்கிறது. என்ன தான் அன்பு, பாசம்னு நாம்ம வாயாலே சொல்லிக்கிட்டு திரிந்தாலும் பணம் இல்லைன்னா கூட இருக்கிறவங்களே மதிக்க மாட்டாங்க உண்மையில பணம் இல்லைன்னா வாழ்க்கை இல்லை அந்த பாழாய் போன பணத்துக்காக பிடிக்காத நாடு, பிடிக்காத உணவு, பிடிக்காத வேலை, பிடிக்காத இடம் தேடி மீண்டும் வந்தேன். வருடமும் போனது வயசும் போய் தலையில் நரையும் வந்தது கூடவே ஒண்ணு ரெண்டு வியாதியும் வந்தது. சின்னதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக எனக்கு வலிகளை கொடுத்த அல்சர் இப்பவெல்லாம் ரொம்பவும் வலி கொடுத்தது. தயிர், மோர், பால், நெய் தவிர பேருக்கு கூட சாம்பார், குழம்பு வகைகளை தொட கூட முடியாத நிலைமைக்கு வாழ்க்கை தள்ளியது. சாப்பிடும் காலத்தில் பணத்துக்காக இங்கே வந்தோம் இன்னும் ஒரு விசாவோ, ரெண்டு விசாவோ அடித்து விட்டு ஊருக்கு போகும் போது இந்த உடம்பில் உயிர் இருக்கிறதோ, இல்லையோ தெரியவில்லை. ஒரு நாள் நண்பன் மற்ற அலுவலக நண்பர்களுடன் நலாஸ் ஆப்பக் கடை அழைத்து சென்றான் நிறைய அசைவ வகைகள் அந்த ஹோட்டலில் இருந்தாலும் என் உடம்புக்கு ஒத்து வராது என்று ரெண்டு ஆப்பமும்-தேங்காய் பாலும் ஆர்டர் செய்தேன். நிறைய நண்பர்கள் மற்றும் ஒரு பெண் தோழியும் கூட இருந்ததால் ஆப்பத்தின் மீது ஒரு நான்கு ஸ்பூன் தேங்காய் பால் ஊத்தி பேருக்கு சாப்பிட்டேன் மீதமுள்ள தேங்காய் பாலை ஸ்பூன் மூலம் இருபது நிமிடம் நாகரீகம் கருதி குடிக்க வேண்டியதாயிற்று ஊரில் வேலை செய்யும் நாட்களில் அம்மா அப்பப்ப திட்டினாலும் என் மேல் பாசம் அதிகம் சிறு வயதிலிருந்தே காரம் எனக்கு பிடிக்காது தேங்காய் பால், ஆப்பம் என்றால் கொள்ளை உசுரு ஒரு நாள் ஒரு சட்டி தேங்காய் பாலில் ஒரு நாலு, அஞ்சு ஆப்பம் போட்டு குழைத்து குடித்து அடிச்ச கதையை இப்போதெல்லாம் நினைத்து பார்த்து மனசு சந்தோசப் பட்டு கொள்கிறது. மனுசனா பொறந்தா கஷ்டம் ,நஷ்டம் இருக்க தான் செய்யும் மத்தவனை விட அந்த ஆண்டவன் நமக்கு கஷ்டத்தை கம்மியா கொடுத்திருக்கான்னு நினைச்சுகிட்டு நம்ம வாழ்க்கையில நடந்த நல்ல நிகழ்வுகளை அசை போட்டுக்கிட்டு வாழ்ந்தா தான் வாழுற வாழ்க்கை சாகுற வரைக்கும் என்ன வாழ்க்கைடா என்று எண்ணாமல் வாழுறதுக்கு உதவும்.

வாழ்க்கை நதி போல ...
ஓடி கொண்டே இருக்கும்...
உடலில் உயிருக்கும் வரை !!

# பஞ்சமும் பசியும்

உணவு, உடை, இருப்பிடம் மனிதர்க்கு
வாழ்வு ஆதாரங்களின் அடிப்படை அன்றோ?
கனவாய் காட்சிக்குக் கிடைக்காது போனால்
வீழ்ச்சியின் தொடக்கம் உருவாகுமே நாட்டில்

வஞ்ச நெஞ்சினரையும் பஞ்சம் தாக்கிடுமே
நெஞ்சத்தின் மனிதமும் காற்றில் பறக்குமே
தஞ்சம் தருவாரைத் தேடித்தேடி தவிக்குமே
நஞ்சுண்டு உயிர் போக்கவும் துணிந்திடுமே

பசி வந்திடப் பத்தும் பறந்திடுமே
புசிப்பது ஒன்றே அதற்கு மருந்தாகுமே
நிசியிலும் உறக்கம் வராது தொலையுமே
நசிந்திடும் நல் ஒழுக்கங்கள் நாட்டினிலே

மக்களுக்கான நாடே சிறப்பன்றோ
அக்கறையற்று திட்டங்கள் தீட்டியது சரியோ
குக்கிராமங்களும் உயிரின்றி தவிப்பது நியாயமோ
முக்குதலும் முனகுதலுமே மக்கள் வாழ்வோ

பஞ்சம் போக்கி பசியும் போக்கணும்
வஞ்சம் இன்றி வளமையைச் சேர்க்கணும்
நெஞ்சம் நிறை மக்கள் நினைவாகணும்
அஞ்சும் மக்களை அன்பால் அரவணைக்கணும்

மழையிருக்கு இயற்கை வளமிருக்கு நாட்டில்
பிழையானது பிழைப்பானது யார் குற்றம்?
அழையாமல் வந்ததா பஞ்சமும் பசியும்
நுழைந்த பிழையான ஆட்சியால் என்பதா?

சுயநலச் சேற்றில் இறங்கியது குற்றமே
இயலாத ஆளாண்மை காரணம் ஆகலாமா?
முயலாத முயற்சிகள் முன்னே வந்திட
துயரங்கள் மட்டும் மக்கள் மேலாகலாமா?

வளமும் நலமுமே மக்கள் வாழ்வாகணும்
உளமும் உடலும் வலுவாகி வாழணும்
களமும் கழனியும் செழிக்கும் நாடாகணும்
அளவில்லா பஞ்சமும் பசியும் விலகிடணும்

**கவிஞர் ராம்க்ருஷ்**

# ஊஞ்சலிது... ஊஞ்சலிது

கண்ணனுடன் எழில்ராதை இணைந்தாடும் ஊஞ்சல்
கன்னியர்கள் சுற்றிநின்றே ஆட்டிவிடும் ஊஞ்சல் !
வெண்ணையுண்ணும் மாயவனின் லீலைகளை எண்ணி
வியந்தபடி கோபியர்கள் விரைந்தாட்டும் ஊஞ்சல் !
செண்பகப்பூந் தோட்டத்தில் ஆநிரைகள் சூழச்
சிரித்தபடி கேசவனைத் தாலாட்டும் ஊஞ்சல் !
வண்ணமயில் தோகையினை விரித்தாடிக் காட்ட
வடிவழகன் மகிழ்ச்சியிலே திளைத்தாடும் ஊஞ்சல் !!


மான்களொடு புள்ளினமும் அருகிருந்து பார்க்க
மாலவனின் பெருமைகளை நினைத்தாடும் ஊஞ்சல் !
தேன்மலரில் மதுவுண்ணும் பொன்வண்டு பாட
தேனிதழாள் நாணத்தில் குனிந்தாடும் ஊஞ்சல் !
மீன்விழியாள் கடைக்கண்ணால் மன்னவனை நோக்க
மின்னதிர்வில் தனைமறந்து சிலிர்த்தாடும் ஊஞ்சல் !
வான்மலர்ந்த விண்மீன்கள் வாழ்த்துகளைச் சொல்ல
வசுதேவர் தேவகியும் இணைந்தாட்டும் ஊஞ்சல் !

தென்றலிலே கலந்தினிக்கும் தேவசுகந் தன்னைத்
தெவிட்டாமல் தான்தாங்கித் திளைத்தாடும் ஊஞ்சல் !
கன்றுகளும் குழலிசையைக் கேட்டவுடன் கூடிக்
கனிவான மொழிபேசிக் கவர்ந்தாட்டும் ஊஞ்சல் !
சின்னவனின் குறும்புகளைப் பூரிப்பாய்க் கூறிச்
சீர்மிகவே தேவர்களும் சேர்ந்தாட்டும் ஊஞ்சல் !
அன்றலர்ந்த மலர்போலும் அழகுநங்கை பார்க்க
அன்னங்களும் பையவந்து அசைத்தாட்டும் ஊஞ்சல் !

தீஞ்சுவையாம் கனித்தமிழில் கவிநிதமும் பாடித்
தித்திக்கப் புலவோர்கள் புகழ்ந்தாட்டும் ஊஞ்சல் !
வாஞ்சையுடன் நந்தகோபர் யசோதையுடன் ஒன்றாய்
மனம்குளிர்ந்து பக்கத்தில் தொட்டாட்டும் ஊஞ்சல் !
பூஞ்சோலைக் காற்றோடு கலந்துவரும் வாசம்
புனிதத்தை நிறைத்திருக்க பூத்தாடும் ஊஞ்சல் !
ஊஞ்சலிது பொன்னூஞ்சல் ஒப்பில்லா ஊஞ்சல்
உள்ளத்தை ஆட்டுவிக்கும் உயர்வான ஊஞ்சல் !!

சியாமளா ராஜசேகர்

# மானிட கைரேகைகள்



மனிதனை தவிர கோலா கரடி, கொரில்லா, சிம்பன்ஸி இவை மூன்றுக்கும் மட்டும் தான் ரேகைகள் உள்ளன.

விஞ்ஞானிகள் கைரேகைகளின் நோக்கம் பொருள்களைப் பிடிக்கும் திறனை மேம்படுத்துவதாக நம்புகிறார்கள். ஆனால் ஆராய்ச்சியாளர்கள் நம் விரல்களுக்கும் ஒரு பொருளுக்கும் இடையில் உள்ள உராய்வை அதிகரிப்பதன் மூலம் கைரேகைகளின் பிடி மேம்படுவதில்லை என்று சொல்கின்றனர்.

ஒரு மனிதன் இறந்த பிறகு கடைசியாக அழிவது அவனது தலை முடியும் மற்றும் ரேகைகளுமே. உங்கள் கைகள் வெட்டுபட்டால் அல்லது தோல் அறுபட்டால், உங்கள் ரேகைகளின் பயணம் தடைப்படாது. மேலும் காயம் ஆறிய பிறகு வெட்டுப்பட்ட இடத்திலும் ரேகை வளரும். அதற்கு பிறகு உங்கள் கை ரேகை VIP ரேகையாக மாறிவிடும். மற்ற கை ரேகைகளை சரி பார்க்க இரண்டு மணி நேரம் ஆகும், உங்களுடைய கை ரேகைகளை சரி பார்க்க இரண்டு நிமிஷம் போதும்.

அந்த வெட்டுப்பட்ட ஆரம்ப புள்ளி அல்லது முடிவின் புள்ளியை மைனுஷை (Minutiae) என்பார்கள். ரேகையை ஒப்பிடும் ஒப்டிகால் சென்சர் Machine முதலில் இந்த மைனுஷையை தான் தேடும்.

பிரிட்டிஷ் மானுடவியலாளரும் சார்லஸ் டார்வின் உறவினருமான சேர். பிரான்சிஸ் கால்டன் 1880 களில் கைரேகைகளை அடையாளம் காணும் வழிமுறையை கண்டுபிடித்தார். ஆதிகால பாபிலோனியர்கள் தங்களது வியாபார நேர்மையை நிரூபிக்க களிமண்ணில் தங்களது ரேகையை பதியும் பழக்கத்தை பின் பற்றினர் (இன்றைய அக்ரீமெண்ட் போல). இருப்பினும், 19 ஆம் நூற்றாண்டு வரை குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்கான ஒரு முறையாக கை ரேகைகள் பயன்படுத்தப்படவில்லை.

பொதுவாக நம் ரேகைகளில் பார்க்கும் கோடுகளை (Ridges)

என்று சொல்லுவார்கள், அதை Loop, Whorl, Arch என்று மூன்று விதமாக பிரிகிறார்கள். தோராயமாக ஒருவர்க்கு கட்டை விரலில் 150 ரிட்ஜஸ் வரை இருக்கும்.

இந்த மூன்றில் இருந்து நிறைய கிளைகள் பிரிகிறது.


- Plain Arch & Tented Arch
- Radial Loop & Ulnar Loop
- Plain whorl & Central pocket whorl
- Double loop whorl & Accidental whorl
-

இதில் #Accidental_whorl என்ற Arch வகை தான் மிக மிக அரிது. உலகில் மொத்தமாக 5% மக்கள்தான் இந்த வகை ரேகை கொண்டுள்ளார்கள்.

ஒரு நபர் வளரும்போது கைரேகைகள் பெரிதாக வளரும் (குழந்தை பருவத்திலிருந்தே முதிர்வயது வரை). ஆனால் அடிப்படை வடிவம் காலப்போக்கில் மாறாது. மேற்கூறிய படி ஒரு நபர் வயதாகும்போது கைரேகையின் அளவு அதிகரிக்கிறது, ஆனால் வடிவங்கள் அப்படியே இருக்கும்.

‘‘நாமோ அவனுடைய விரல்களின் நுனியைக்கூட மிகத் துல்லியமாக அமைப்பதற்கு ஆற்றல் பெற்றுள்ளோம்’’ (அல்குர்ஆன் 75:4)

**ஆஷா பாலின்**
மூதூர் - திருகோணமலை



## கிறிஸ்டியானோ ரொனால்டோ

போர்த்துக்கல்லின் வீரனாய்
மா உலகிற்கு தெரிந்திட்டாய்
மைதானக் கட்டுப்பாடின்றி
கதறி அழுததேனோ
பிறப்பதற்கே சந்தேகமாய்
வறுமையின் கொடுமை
தாங்கிட்ட தெய்வமாய்
தாயவளே இருந்திட்டாள்

கிறிஸ்டியானோ ரொனால்டோவாய்
கால்பந்துக்கு அறிமுகமாகி
பன்னிரெண்டு வயதினிலே
இதயஅறுவை சிகிச்சையை சந்தித்தாய்
தடை தாண்டி புறப்பட்டு
ஆணவமில்லா ஆண் மகனாய்
பாரதினில் நின்றிட்டாய்

கால்பந்து கைதருமா எனக்கேட்ட
ஆசானிடம் ஆசனத்தையே எறிந்திட்ட
ஆண்மகன் நீ
தடைகளை கண்டு தடைப்படாமல்
நடைபாதை நோக்கி வழிகண்டு
உலகெங்கும் ரசிகர்களாய்
நாள் தோறும் வாழ்ந்திட்டாய்

தெய்வமாய் அம்மாவும் ஹீரோவாய்
தகப்பனும் தகப்பனின் கனவுகளை
தட்டி விடாமல் கதறிய
உள்ளமதனை நாம் அறிவோம்
மொராக்கோவிடம் தோற்றிட்டு
37 வயதினிலே கட்டாரிலே
கனவுகளை கண்ணீராய்
கலைத்திட்டதேனோ

**ரீனத் R.F**

# உள்ளுயிரின் தூக்கம் ....

மரணங்கள் தேவைப்படும் வாழ்வுக்கு
சொற்கள் கூட சில வேளைகளில்
நஞ்சாகி விடும்.

வலிமை இழந்து போன கைகள்
தூர்வாரி இறைக்கும்
இயந்திரங்களை
யாசித்து நிற்கையில்
எங்கள் கிணறுகள்
நஞ்சாகிக் கிடக்கின்றன.

அதனைப் பருகும்
காமவெறியர்கள்
அழுக்குக் கனவுகளை
இன்புணர்தல் என்றழைக்கிறார்கள்

தொழுகையை முழங்கால்களும்
இறை துதியை கரங்களும்
நிகழ்த்தும் புனிதப் புரட்சியில்
மனது புனித நீரை
நஞ்சாக்குகிறது

வரவிருக்கும் வசந்தத்தில்
யாருமே பருகாத
இளந் தென்றலை
தாகமாய்க் கொள்வதற்காய்
குளிர்ந்த ஊற்றின் அடிவாரத்தில்
கோடையாய் விரிந்து கிடக்கிறேன்
இருளடர்ந்த மரங்களால்
எனது வனம்

தீப்பற்றிக் கொள்கையில்
ஆசீர்வதிக்கக் கற்றுத் தந்தவனே
இன்று
சபிக்கக் கற்றுத்
தந்துகொண்டிருக்கிறான்

மோசமான கனவினால்
தூக்கத்திலிருந்து

விழித்துக் கொள்பவன்போல்
திகிலறைந்து விழிக்கையில்
உள்ளுயிர் உறங்கிக் கொண்டிருந்தது

**- எ. ஜோய், பிரான்ஸ்**

## குறைகளை நிவர்த்தி செய்துவிடு....

பிறர் குறைகண்டு களிக்காமல்
தன் குறையறிந்து துயிலெழு

பிறர் உயர்வு கண்டு துவேசமடையாது
தான் உயர்வடைய

ஆவேசம்கொள்

பிறர் உள்ளம் உருக்கிடாது
தன் உள்ளம் உறுதிகொள்

பிறர் தூற்ற வாழ்ந்திடாது
தான் போற்றி வாழ வை

பிறர் ஆன்மாவை அழித்திடாது
தன் ஆன்மாவை ஆக்கிடு

பிறர் பேச்சை மொழியாது
தன் பேச்சை மொழிந்திட செய்

பிறர் மிதித்து கரையேறாது
தன் கைகொடுத்து கரையேறிடச் செய்

**- அன்ஷியா...**
**கிண்ணியா**

## தவிப்பு

பெருங்கடலின்
மையத்தில்
சிறிய படகென
தடுமாறுகிறது
மாநகரத்து நெரிசலில்
பட்டாம்பூச்சி!

## உச்சாணிக்கொம்பு

வேரிலூறும்
எறும்புகளின்
பசித்துயரங்களை
அறியாதிருக்கக்கூடும்...


மரத்தின்
உச்சிக்கிளையிலிருந்து
கொய்யா ருசிக்கும்
அணில்கள்!

**ரகுநாத் வ,** மதுரை

# ஸ்ரீலங்கா பென்கிளப்பின் இரண்டாவது தேசிய மாநாடு

ஆற்றல் உள்ள பெண்கள் அமைப்பான ஸ்ரீலங்கா பென்கிளப்பின் இரண்டாவது தேசிய மாநாடு ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள இஸ்லாமிய அறபு மொழிகள் பீடத்தின் கேட்போர் கூடத்தில், கடந்த சனிக்கிழமையான டிசம்பர் 24 ஆம் திகதி திருமதி மஷூறா சுஹூர்தீன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாகமுன்னாள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளரும், இலங்கைத் தூதுவரு னிவாவின் ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதியுமான ஏ.எல்.ஏ.அஸீஸ், அவர்களும், கௌரவ அதிதிகளாக தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட நூலகர் கலாநிதி மஸ்ரூபா முஹம்மட், மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஜனாப் ஏ.எல்.தௌபீக், திருமதி. ஜிஹானா ஆலிப் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - வலயக் கல்வி அலுவலகம் கல்முனை) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிறை எப்.எம் பணிப்பாளர் பஷீர் அப்துல் கையூம், ஆகியோரும், விசேட அதிதிகளாக சிரேஷ்ட ஊடகவியலாளரான பி.எம்.ஏ.காதர், அல்ஹாஜ்.இஸட்.எம்.பஷீர் JP (பணிப்பாளர் ஈஸ்டன் ஜுவலரி - சம்மாந்துறை), எம்.எஸ்.எம். ஸாகிர் JP (ஊடகவியலாளர்), எம்.எச்.பௌசுல் ஹிபானா (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம் கல்முனை), எழுத்தாளர் விஜயலக்ஷ்மி சேகர் (இணைப்பாளர் - சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்) மற்றும் உரையாளர்களாக கலாநிதி ஹனீபா இஸ்மாயில, பேராசிரியர் எஸ்.எம் ஐயூப், ஆய்வாளர் சிராஜ் மஷூர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.



இம் மாநாட்டில் ஸ்ரீலங்கா பென்கிளப்பின் காலாண்டு சஞ்சிகையான அவரி நான்கா வது இதழ்வெளியிடப் பட்டதும் சிறப்பம்சமாகும். இந்நிகழ்வில் இவ்வமைப்பின் உறுப்பினர் கள் அவர்களின் அளவற்ற சேவைகள், பங்களிப்புகளுக்காக விருதுகள், நினைவுச் சின்னங்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டனர். இலங்கையின் நாற்திசை களிலும் இருந்து வருகை தந்த முஸ்லிம் பெண் எழுத்தாளர்களால் நிகழ்வுகள் களைகட்டின. இந்த ஒன்றுகூடல் ஸ்ரீலங்கா பென்கிளப்பின் ஸ்தாபகரும் நிர்வாகியுமான மஷூறா சுஹூர்தீன் அவர் களின் முயற்சியில், வெற்றிகரமாக அமைந் திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.


SRI LANKA PEN CLUB

ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை
ஜனவரி - பிப்ரவரி 2023
ஆண்டு 3 ▲ இதழ் 04

பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் 'பாவேந்தல் பாடல்கள்' நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிறன்று (18-12-2022) காலை 9.00 மணிக்கு, அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு சக்கீ மண்டபத்தில், அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவி செயலாளர் சட்டத்தரணி பாத்திமா நஹீஜா முஸாபிர் தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவின் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என் எம் அப்துல்லாஹ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

ஓய்வு நிலைப் பேராசிரியர் திரு செ.யோகராசா மற்றும் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர் உட்பட கலை இலக்கியவாதிகள் அறிவுஜீவிகள் கல்விமான்கள் என பலரும் கலந்து சிறப்பித்த இவ்விழாவில் , விரிவுரையாளர் எம் அப்துல் றசாக் அவர்களின் நயவுரையும் இடம் பெற்றது.







0 772719 252001